# 12ஆம் வகுப்பு தமிழ் முதல்தாள்

| வ.எண் | தலைப்பு | வினாக்கள் | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | சிறுவினா | 1 – 6 | 4x2=8 |
| 2 | பெருவினா | 7 – 11 – 3 = 12 | 3x4=12 |
| 3 | பெருவினா | 12 - 16 - 3 = 12 | 3x4=12 |
| 4 | நெடுவினா | 20 – 21 | 1x8=8 |
| 5 | பாடலடிவினா | 22 – 6 | 4x1=4 |
| 6 | மனப்பாடம் | 23 – 4 | 6+4=10 |
| 7 | பகுபதம் | 24 | 2x2=4 |
| 8 | இலக்கணக்குறிப்பு | 25 | 3x2=6 |
| 9 | புணர்ச்சி | 26 | 2x2=4 |
| 10 | திணை, துறை | 27 | 1x4=4 |
| 11 | அணி | 28 | 1x4=4 |
| 12 | பொருத்துக | 29 – 32 | 4x1=4 |
| 13 | உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | 33 – 48 | 16x1=16 |
| 14 | கோடிட்ட இடங்களை நிரப்புக | 49 – 50 | 2x2=4 |
| மொத்தம் | | | 100 |

| வ. எண் | தலைப்பு | வினாக்கள் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1 | **சிறுவினா** | குறுவினா - 16 | 8 |
| 2 | பெருவினா | திருக்குறள் - 5<br>வாழ்த்து - 3 | 8 |
| 3 | பெருவினா | சிற்றிலக்கியம் - 4<br>மறுமலர்ச்சி - 4 | 12 |
| 4 | நெடுவினா | திருக்குறள் மட்டும். - 4 | 8 |
| 5 | மனப்பாடப் பாடல் | செய்ந்நன்றியறிதல்<br>அறிவுடைமை | 4 |
| 6 | பகுபதம்,<br>இலக்கணக்குறிப்பு,<br>புணர்ச்சிவிதி, | | 14 |
| 7 | அணி<br>இலக்கணம் | உவமை<br>அணி,எடுத்துக்காட்டு<br>உவமைஅணி, சொற்பொருள்<br>பின்வரும் நிலையணி | 4 |
| 8 | **திணை, துறை** | பொதுவியல்திணை,<br>பொருண்மொழிக்<br>காஞ்சித் துறை | 4 |
| 9 | உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக | | 16 |
| **மொத்தம்** | | | 78 |

# 12ஆம் வகுப்பு தமிழ் இரண்டாம்தாள்

| வ.எண் | தலைப்பு | வினா எண் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| 1 | பெருவினா | 1 – 5 | 12 |
| 2 | பெருவினா | 6 – 12 | 12 |
| 3 | நெடுவினா | 11 – 12 | 6 |
| 4 | துணைப்பாடம் | 13 – 14 | 20 |
| 5 | இலக்கியநயம் பாராட்டல் | 15 | 10 |
| 6 | மொழிப்பயிற்சி | 16 – 21 | 6 |
| 7 | பழமொழி | 22 | 4 |
| 8 | ஒரு மதிப்பெண் வினா - மொழித்திறன் பயிற்சி | 23 - 32 | 10 |
| **மொத்தம்** | | | **80** |

| வ. எண் | தலைப்பு | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | பாடம் - 1,2 மட்டும் 9வினாக்கள் | 8 |
| 2 | பாடம் - 5,7 மட்டும் 10 வினாக்கள் | 8 |
| 3 | பாடம் - 1,7 மட்டும் 4 வினாக்கள் | 6 |
| 4 | துணைப்பாடம் - 1,4 மட்டும் 2 வினாக்கள் | 10 |
| 5 | துணைப்பாடம் - 6,9 மட்டும் 2 வினாக்கள் | 10 |
| 6 | இலக்கியநயம் பாராட்டல் மாதிரி - 1 | 10 |
| 7 | தமிழாக்கம் - 20 | 6 |
| 8 | மொழிப்பயிற்சி - புத்தகத்திற்குப் பின் உள்ளது மட்டும் | 8 |
| **மொத்தம்** | | **66** |

# தமிழ் முதல் தாள்

**1.உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

பயிற்சிகள் செய்யுட்களின் பின் அமைந்துள்ளன. அவற்றிலிருந்தே வினாக்கள் கேட்கப்படும். அவற்றோடு நூல்குறிப்பு , ஆசிரியர் குறிப்பு ஆகியவற்றையும் படித்தால் **16 மதிப்பெண்களையும் பெற்றிடலாம்.**

**2. திணை அல்லது துறையை விளக்குக.**

பொதுவியல் திணை, பொருண்மொழிக் காஞ்சித்துறை
ஆகியவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்கமாகப் படித்தாலே
**4 மதிப்பெண்களையும் பெற்றிடலாம்.**

**3. பாடப்பகுதிகளில் அமைந்த அணிகளில் திருக்குறளில் அமைந்த 3 அணிகளைப் படித்தாலே 4 மதிப்பெண்களையும் பெற்றிடலாம்.**

*அணி இலக்கணம், எடுத்துக்காட்டு, அணி அமைந்த தன்மை
ஆகியவை விளக்கப்பட வேண்டும்.

4. **சிறுவினாக்களில் கீழே உள்ள பகுதிகளுக்கு வரைவுத்திட்டம் முக்கியத்துவம் தந்துள்ளது.**

*தொகை நூல்கள் - **23** வினாக்களில் **ஒன்று** வரும்.
*திருக்குறள் - **23** வினாக்களில் **ஒன்று** வரும்.
*தேம்பாவணி – **14** வினாக்களில் **ஒன்று** வரும்.
*சிற்றிலக்கியம் - **7** வினாக்களில் **ஒன்று** வரும்.
*மறுமலர்ச்சிப் பாடல்கள் - **14** வினாக்களில் **ஒன்று** வரும்.
*வழிபாட்டுப் பாடல்கள் - **14** வினாக்களில் **ஒன்று** வரும்.

இவற்றுள் **தேம்பாவணி,சிற்றிலக்கியம்,மறுமலர்ச்சிப் பாடல்கள், வழிப்பாட்டுப்பாடல்கள்** ஆகிய பகுதிகளை மட்டும் படித்தாலே சிறுவினாக்களில் **8 மதிப்பெண்களைப்** பெற்று விடலாம்.

**5. பெருவினாக்கள் கேட்கப்படும் பகுதிகள் வினாத்தாள் திட்ட வரைவு அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

**முதல் பகுதி:-**

வாழ்த்து : **4 வினாக்களில் ஒன்று எழுதினால் 4 மதிப்பெண் பெறலாம்**
திருக்குறள்: **10 வினாக்களில் ஒன்று எழுதினால் 4 மதிப்பெண் பெறலாம்**
தொகைநூல்கள்: **12 வினாக்களில் ஒன்று எழுதினால் 4 மதிப்பெண் பெறலாம்**
தேம்பாவணி **6 வினாக்களில் ஒன்று எழுதினால் 4 மதிப்பெண் பெறலாம்**
பாண்டியன் பரிசு **5 வினாக்களில் ஒன்று எழுதினால் 4 மதிப்பெண் பெறலாம்**

**இரண்டாம் பகுதி:-**

சிற்றிலக்கியம் **5 வினாக்களில் 2 எழுதினால் 8 மதிப்பெண் பெறலாம்**
மறுமலர்ச்சிப் பாடல்கள் **4 வினாக்களில் 2 எழுதினால் 8 மதிப்பெண் பெறலாம்** வழிபாட்டு பாடல்கள் **6 வினாக்களில் 1 எழுதினால் 4 மதிப்பெண் பெறலாம்**

**இரு பகுதிகளிலும் தலா மூன்று மூன்று வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். மறுமலர்ச்சிப் பாடல்கள், சிற்றிலக்கியப் பகுதிகளில் குறைவான வினாக்களில் இருந்து 4 வினாக்கள் கேட்கப்படுவதால் ஆழமாகக் கற்றிடுக.**

**மேற்கண்ட பகுதிகளை முழுமையாகப் படித்தாலே வெற்றி பெற்றுவிடலாம்.**

**6. நெடுவினாக்கள் 3 பகுதிகளில் இருந்து கேட்கப்படும்.**

1. **திருக்குறள்**
2. **தொடர்நிலைச் செய்யுள்**
3. **மறுமலர்ச்சிப் பாடல்கள்**

முழுமையான மதிப்பெண்கள் பெற விரும்புவோர் திருக்குறளின் **கருத்துக்களைத்** தெளிவாக எழுதுக. எளிதாகப் படிக்க விரும்புவோர் மறுமலர்ச்சிப் பாடல் வினாக்களைப் படிக்கலாம்.

**7. பாடல்அடியின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுதல்.**

தொகைநூல்கள், தொடர்நிலைச் செய்யுள் பகுதி பாடல் அடிகளை நன்கு அறிந்து கொண்டால் இப்பகுதியில் 4 மதிப்பெண்கள் பெறலாம்.

**8. இலக்கணப்பகுதி:**

பகுபத உறுப்பிலக்கணம் :-

- ‘த்’ சந்தி ‘ந்’ ஆனது விகாரம் அமையும் சொற்கள் .
- பெயரெச்சம் / வினையெச்சம் விகுதி அமைபவை
- வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினைமுற்று விகுதி அமைபவை.
- எளிய வினைமுற்று விகுதிகள் அமைபவை

இவற்றை நன்கு படித்தாலே 4 மதிப்பெண்கள் பெறலாம்.

**இலக்கணக்குறிப்பு**

- பண்புத்தொகை
- வினைத்தொகை
- எண்ணும்மை / உம்மைத்தொகை
- அளபெடை
- உருவகம்
- பெயரெச்சம் / வினையெச்சம்

இவற்றை நன்கு படித்தாலே 6 மதிப்பெண்கள் பெறலாம்

**புணர்ச்சி விதி தருக:-**

1. ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’
2. ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’
3. ‘பூப்பெயர்முன் இனமென்மையும் தோன்றும்
4. ‘ஈறுபோதல்’
5. ‘இனமிகல்”
6. ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’

**ஆகிய விதிகள் அமையப்பெற்ற சொற்களைப் பிரித்து புணர்ச்சிவிதி எழுதிப் பழகுக. முழுமையான மதிப்பெண்களைப் பெற்றுவிடலாம்.**

**9. பொருத்துக:-**

செய்யுள் பகுதியின் பின் உள்ள பொருத்துக பயிற்சிகளை நன்கு படித்தால் 4 மதிப்பெண்கள் பெறலாம்.

**10. மனப்பாடப் பகுதி**

**மனப்பாடப்பகுதிகளைப் பாவகையோடு** முழுமையாகப் படித்திடுக. எழுத்துப்பிழை இல்லாமல் அடிபிறழாமல் எழுதினால் முழுமதிப்பெண்கள் (10) பெற்றிடலாம்.

**11. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக:-**

திருக்குறளின் 40 குறள்களையும் நன்கு படித்தால் முழுமையான மதிப்பெண்கள் 4 பெறலாம்.

தெளிவான எழுத்து வடிவம்,பிழை இல்லாமல் எழுதுவது ஆகியவற்றை விடை அளிக்கும் போது கடைப்பிடித்தால் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெறலாம்.

# தமிழ் இரண்டாம் தாள்

**I**. துணைப்பாடக் கட்டுரைகளில் முழு மதிப்பெண் பெற விரும்புகின்ற மாணவ, மாணவியர்கள் கவனிக்க:

13ஆம் வினாவிற்குத் துணைப்பாடங்கள் 1 முதல் 5 வரை உள்ள கதைகளைப் படித்தால் 10 மதிப்பெண்களைப் பெறலாம்.

கதைத்தலைப்பு, ஆசிரியர் பெயர்
முன்னுரை
கதைக்கரு
கதை மாந்தரின் பெயர்கள்
கதையின் போக்கை உட்தலைப்புகள் கொடுத்து எழுதுதல்
கதை உணர்த்தும் நீதி
முடிவுரை

இவற்றை முழுமையாகப் பின்பற்றுக

14ஆம் வினாவிற்கு 6 முதல் 10 வரை உள்ள துணைப்பாடப் பகுதியில் ‘ஒவ்வொரு கல்லாய்’, ‘மண்’ ஆகிய சிறுகதைகளில் மட்டுமே கதை மாந்தர் பண்புகள் வினா உள்ளது. எனவே அவற்றை ஊன்றிப் படிக்கவும்.

கதைத் தலைப்பு, ஆசிரியர் பெயர்
முன்னுரை
கதைச்சுருக்கம்
கதையின் ஒரு கதா மாந்தரின் பண்புகளைச் சிறுசிறு பத்திகளில் விளக்குக

இவை அனைத்தையும் பின்பற்றினால் 10 மதிப்பெண்களைப் பெறலாம்.

**II**. 15ஆம் வினா இலக்கிய நயம் பாராட்டல் பகுதியில் பாரதியார், பாரதிதாசன், கவிமணி, நாமக்கல்லார் பாடல்கள் மட்டுமே வழங்கப்படும்.

- கொடுக்கப்பட்ட பாடலின் கருத்துகளை எளிய உரைநடை வடிவில் எழுத வேண்டும்.
- அதனைச் சுருக்கி மையக்கருத்தாக எழுதவேண்டும்.
- பாடலில், உவமை அணி, சொற்பொருட்பின்வரு நிலையணி, இயல்பு நவிற்சி அணி, உயர்வு நவிற்சி அணி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று அமைந்துள்ளதை எடுத்து எழுத வேண்டும்.
- முன்னுரை, பொருள்நயம், சொல்நயம், மோனை, எதுகை, சந்தநயம், சுவைநயம், பாடல்தலைப்பு, முடிவுரை ஆகியவை அமைத்துக் கட்டுரை எழுதவும்.

**I, II** ஆகிய இரண்டு பகுதிகளை நன்றாகப் படித்தாலே தமிழ் இரண்டாம் தாளில் மாணவ, மாணவியர் வெற்றி பெறலாம்.

**III. உரைநடையின் பாடப் பகுதிகளுக்குப் பின் இருக்கும் மொழிப்பயிற்சிகள் மட்டும் படித்தாலே 10 மதிப்பெண் கிடைக்கும்.**

- வாக்கியப் பிழை நீக்குக, சந்திப் பிழை நீக்குக
- மரபுப் பிழை நீக்குக, பிறமொழிச் சொற்களை நீக்குக
- வழூஉச் சொற்களை நீக்குக முதலிய பகுதிகளை நன்றாகப் படிக்கவும்.

**IV. பெருவினா இரண்டு பிரிவாகக் கேட்கப்படும்.**

- (1 முதல் 4 பாடம் வரை முதல் பகுதி)
- 1,2,3 ஆகிய பாடங்கள் நன்கு படித்தாலே முழு மதிப்பெண்கள் (12) பெறலாம்.
- (5 முதல் 8 பாடங்கள் வரை இரண்டாம் பகுதி).
- 5,6,7 ஆகிய பாடங்களில் உள்ள பெருவினாக்களைப் படித்தாலே முழு மதிப்பெண்கள் (12) பெறலாம்.

**V. நெடுவினாக்கள் இரண்டு பகுதிகளாகக் கேட்கப்படும்.**

- 1 முதல் 4 வரை முதல் பகுதி
- 5 முதல் 8 வரை இரண்டாம் பகுதி

இவற்றுள் ஒரு பகுதியில் உள்ள நெடு வினாக்களை முழுமையாகப் படித்தாலே நெடுவினாவில் 6 மதிப்பெண்களைப் பெறலாம்

தமிழாக்கம், வாழ்வியல் நிகழ்வு பகுதிகளில் முழு மதிப்பெண் பெறுவதற்கு இதுவரை அரசு வினாதர்களில் கேட்கப்பட்ட தமிழாக்கம், வாழ்வியல் நிகழ்வு ஆகியவற்றை மீண்டும் மீண்டும் படித்துப் பயிற்சி செய்ய வேண்டும்.

மேற்கூறியவற்றை மாணவ, மாணவியர்கள் கருத்தில்கொண்டு நன்கு கற்று **80/80** மதிப்பெண்களை வெல்க.

# தமிழ் முதல் தாள்

## பகுதி – 1 (ஒரு மதிப்பெண் வினா - விடைகள்)

**உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.**

1. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்
அ) நக்கீரர் **ஆ) ஒட்டக்கூத்தர்** இ) இளங்கோவடிகள்
2. 'ஒன்றேயென்னின் ' என்னும் கடவுள் வாழ்த்துப்பாடல் அமைந்துள்ள காண்டம்
அ) அயோத்தியா காண்டம் ஆ) சுந்தர காண்டம் **இ) யுத்த காண்டம்**
3. கம்பர் தாம் இயற்றிய காப்பியத்திற்கு இட்ட பெயர்
அ) கம்பராமாயணம் **ஆ) இராமாவதாரம்** இ) திருக்கை வழக்கம்
4. தமிழரசி குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன்
அ) சிவன் ஆ) திருமால் **இ) முருகன்**
5. "கற்றோரால் புலவரேறு " என்று சிறப்பிக்கப் பெற்றவர்
**அ) வரத நஞ்சையப் பிள்ளை** ஆ) கம்பர் இ) சேக்கிழார்
6. புறம், புறப்பாட்டு என வழங்கப் பெறுவது
அ) அகநானூறு ஆ) பதிற்றுப்பத்து **இ) புறநானூறு**
7. புறநானூற்றில் இடம் பெற்றுள்ள திணைகள்
அ) ஐந்து **ஆ) பதினொன்று** இ) பத்து
8. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல்
அ) அகநானூறு ஆ) ஐங்குறுநூறு **இ) புறநானூறு**
9. புறநானூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள்
அ) 11 **ஆ) 65** இ) 75
10. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு **இ) பரிபாடல்**
11. பரிபாடல் என்னும் நூல்
அ) அகப்பாடல்களைக் கொண்டது
**ஆ) அக, புறப் பொருள் பாடல்களைக் கொண்டது**
இ) புறப்பாடல்களைக் கொண்டது
12. அகநானூறு மணிமிடை பவளத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை
அ) 100 ஆ)120 **இ)180**
13. அகநானூற்றுப் பாக்களின் அடிவரையறை
அ) 4 முதல் 8 அடி வரை ஆ)9 முதல் 12 அடி வரை
**இ) 13 முதல் 31 அடி வரை**
14. நற்றிணையைத் தொகுப்பித்தவன்
அ) ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆ) ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
இ) **பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி**
15. நற்றிணைப் பாக்களின் அடிவரையறை
அ) 4 முதல் 8 அடி வரை **ஆ) 9 முதல் 12 அடி வரை**
இ) 13 முதல் 31 அடி வரை
16. கபிலரை ' வாய்மொழிக் கபிலர் ' எனப் போற்றியவர்
**அ) நக்கீரர்** ஆ) பெருங்குன்றூர்க் கிழார் இ) மாறோக்கத்து நப்பசலையார்
17. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர்
அ) கபிலர் ஆ) வரந்தருவார் **இ) பெருந்தேவனார்**
18. குறட்பா என்பது
அ) நாலடி வெண்பா ஆ) மூவடி வெண்பா **இ) ஈரடி வெண்பா**
19. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
அ) 70 **ஆ) 38** இ) 25
20. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்
அ) 4 **ஆ) 9** இ) 30

21. கொண்டாடப்பெறும் திருவள்ளுவராண்டின்படி அவர் வாழ்ந்த காலம்

**அ) கி.மு. 31** ஆ) கி.பி. 31 இ) கி.மு. 18 ஈ) கி.பி.190

22. பொருட்பாலின் இயல்கள்

அ) பாயிரம், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்

**ஆ) அரசியல், அங்கவியல், ஒழிபியல்** இ) களவியல், கற்பியல்

23. திருக்குறளின் பெருமையை உணர்த்துவது

அ) பழமொழி **ஆ) திருவள்ளுவமாலை** இ) நாலடியார்

24. வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே எனப் பாடியவர்

அ) பாரதியார் **ஆ) பாரதிதாசன்** இ) கவிமணி

25. சிலப்பதிகாரத்திலுள்ள காண்டங்கள்

**அ) மூன்று** ஆ) ஆறு இ) முப்பது

26. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு

அ) படலம் ஆ) இயல் **இ) காதை**

27. சிலப்பதிகார உரையாசிரியருள் ஒருவர்

அ) இளம்பூரணார் **ஆ) அரும்பதவுரைகாரர்** இ) நச்சினார்க்கினியர்

28. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் சிறப்புப் பெயர்களில் ஒன்று

**அ) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்** ஆ) கண்ணகி காதை

இ) சிலப்பதிகாரம்

29. தேனிலே ஊறிய செந்தமிழின் --- சுவை தேறும் சிலப்பதிகாரம் என்று பாராட்டியவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

30. வரி என்பது _____ வகையது

அ) சந்தப்பாடல் ஆ) கலிப்பாடல் இ) **இசைப்பாடல்**

31. கம்ப நாடகத்தின் யாப்பு வண்ணங்களுக்குக் கூறப்படும் கணக்கீடு

**அ) 96** ஆ) 108 இ) 100

32. உத்தர காண்டத்தைப் பாடியவர்

**அ) ஓட்டக்கூத்தர்** ஆ) வான்மீகி இ) புகழேந்தி

33. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்களின் எண்ணிக்கை

**அ) ஆறு** ஆ) ஏழு இ) ஒன்பது

34. சுந்தர காண்டம் இராமாயணத்தில்

அ) முதற்காண்டம் ஆ) **ஐந்தாங் காண்டம்** இ) ஏழாங்காண்டம்

35. சுந்தரன் என்னும் பெயரால் இராமாயணத்தில் வழங்கப்படுவபர்

**அ) அனுமன்** ஆ) இராவணன் இ) இலக்குவன்

36. ‘சிறிய திருவடி’ என்று அழைக்கப்படுபவர்

அ) கருடன் **ஆ) அனுமன்** இ) வீடணன்

37. தனயை என்ற சொல்லின் பொருள்

அ) அம்மா ஆ) உடன்பிறந்தாள் **இ) மகள்**

38. இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் காட்டியது

**அ) கணையாழி** ஆ) அணிமணிகள் இ) கடிதம்

39. சீதாப்பிராட்டி தன்னை மீட்டுச்செல்ல வேண்டி விதித்த காலம்

**அ) ஒருதிங்கள்** ஆ) ஓராண்டு இ) ஒருநாள்

40. வீரமாமுனிவரின் தாய்நாடு

அ) தமிழகம் ஆ) பிரான்சு **இ) இத்தாலி**

41. கொன்ஸ்டான் என்னுஞ் சொல்லுக்குப் பொருள்

அ) கொன்றவன் **ஆ) அஞ்சாதவன்** இ) வேற்றுநாட்டவன்

42. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி

**அ) சதுரகராதி** ஆ) பேரகராதி இ) அரும்பத அகராதி

43. திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் ஆகியவற்றை வீரமாமுனிவர் மொழிபெயர்த்துத் தந்தது

அ) ஆங்கிலம் **ஆ) இலத்தீன்** இ) வடமொழி

44. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர்

**அ) சூசைமாமுனிவர்** ஆ) இயேசுபெருமான் இ) தாவீதன்

45. பாரதிதாசனார் வெளியிட்ட இதழ்

அ) தேன்மழை **ஆ) குயில்** இ) தென்றல்

46. புரட்சிக் கவிஞர் எனப் போற்றப்பட்டவர்
அ) பாரதியார் **ஆ) பாரதிதாசன்** இ) கம்பதாசன்

47. பாண்டியன் பரிசைக் கைப்பற்ற நினைத்தவன்
அ) வீரப்பன் ஆ) வேலன் இ) **நரிக்கண்ணன்**

48. பாரதிதாசன் எழுதிய நூல்களுள் ஒன்று
அ) புதிய விடியல்கள் **ஆ) குறிஞ்சித்திட்டு** இ) தேன்மழை

49. சாகித்திய அகாதெமிப் பரிசு பெற்ற பாரதிதாசனின் நூல்
**அ) பிசிராந்தையார்** ஆ) பாண்டியன் பரிசு இ) அழகின் சிரிப்பு

50. 'கவிச்சக்கரவர்த்தி', 'கவிராட்சகன்' என்றெல்லாம் புகழப்படுபவர்
அ) கம்பர் **ஆ) ஒட்டக்கூத்தர்** இ) இளங்கோவடிகள்

51. ' திவ்விய கவி ' என்ற பெயரால் அழைக்கப்படுபவர்
**அ) பிள்ளைப்பெருமாள் அய்யங்கார்** ஆ) ஒட்டக்கூத்தர் இ) குமரகுருபரர்

52. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்
அ) மதுரைக் கலம்பகம் **ஆ) நந்திக் கலம்பகம்** இ) காசிக் கலம்பகம்

53. புலன் -- என்னும் இலக்கிய வகை
அ) கலம்பகம் **ஆ) பள்ளு** இ) உலா

54. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம்
**அ) கலம்பகம்** ஆ) உலா இ) பள்ளு

55. பிரபந்தம் --- என்னும் வடசொல் உணர்த்தும் பொருள்
அ) நகைச்சுவைநூல் ஆ) **நன்கு கட்டப்பட்டது** இ) அறிவுரைநூல்

56. முக்கூடற்பள்ளுக்குரிய பாவகை
**அ) சிந்துப்பா** ஆ) ஆசிரியப்பா இ) வஞ்சிப்பா

57. வடமொழியில் பாரதம் பாடியவர்
அ) வான்மீகி **ஆ) வியாசர்** இ) காளிதாசர்

58. அந்தாதிக்கு வழங்கப்படும் வேறு பெயர்
அ) சிலேடை **ஆ) சொற்றொடர் நிலை** இ) பிரபந்தம்

59. பாரதிதாசனின் இயற்பெயர்
அ) துரைராசு ஆ) எத்திராசன் இ) **சுப்புரத்தினம்**

60 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே ' என்ற பாடலைத் தமிழ் வாழ்த்தாக ஏற்றுக்கொண்டுள்ள அரசு
அ) தமிழ்நாடு அரசு **ஆ) புதுவை அரசு** இ) பிரெஞ்சு அரசு

61. பாஞ்சாலி சபதத்திலுள்ள சருக்கங்களின் எண்ணிக்கை
**அ) 5** ஆ) 7 இ) 9

62. நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்கு உழைத்தல் என்று பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன் **இ) பாரதியார்**

63. 20ஆம் நூற்றாண்டின் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்
**அ) பாரதியார்** ஆ) பாரதிதாசன் இ) கம்பதாசன்

64. செந்தமிழைச் செழுந்தமிழாகக் காண விரும்பியவர்
அ) பாரதியார் **ஆ) பாரதிதாசன்** இ) கம்பதாசன்

65 பிரெஞ்சுக் குடியரசுத்தலைவரால் செவாலியர் விருதினைப் பெற்றவர்
அ) பாரதிதாசன் **ஆ) வாணிதாசன்** இ) முடியரசன்

66. கவிஞரேறு, பாவலர் மணி முதலிய பட்டங்களைப் பெற்றவர்
அ) கவிஞர் சுரதா **ஆ) வாணிதாசன்** இ) முடியரசன்

67. தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த்
**அ) வாணிதாசன்** ஆ) முடியரசன் இ) பாரதிதாசன்

68. சுரதாவின் நூல்களுள் தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசினைப் பெற்ற நூல்
**அ) தேன்மழை** ஆ) துறைமுகம் இ) சுவரும் சுண்ணாம்பும்

69. உவமைக்கவிஞர்
அ) பாரதி **ஆ) சுரதா** இ) கண்ணதாசன்

70. கிறித்துவக் கம்பர்
அ) கம்பர் ஆ) வீரமாமுனிவர் **இ) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை**

71. ‘சின்னச் சீறா’ என்ற நூலை எழுதியவர்
அ) உமறுப்புலவர் ஆ) குணங்குடி மஸ்தான் **இ) பனு அகமது மரைக்காயர்**

72. சுந்தரர் தேவாரம்
அ) முதலாந்திருமுறை **ஆ) ஏழாந்திருமுறை** இ) பன்னிரண்டாந்திருமுறை

73. திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை எழுதியவர்
அ) அடியார்க்கு நல்லார் ஆ) அரும்பத உரைகாரர் **இ) பெரிய வாச்சான் பிள்ளை**

74. தமிழக அரசு வழங்கும் பாவேந்தர் நினைவுப்பரிசினை முதலில் பெற்ற கவிஞர்
அ) வாணிதாசன் ஆ) கண்ணதாசன் **இ) சுரதா**

75. தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தமிழன்னை விருது பெற்ற கவிஞர்
**அ) அப்துல் ரகுமான்** ஆ) மோகனரங்கன் இ) தாராபாரதி

76. தம்பிரான் தோழர் என்று அழைக்கப்பட்டவர்
அ) திருநாவுக்கரசர் **ஆ) சுந்தரர்** இ) திருஞானசம்பந்தர்

77. இரட்சணிய யாத்திரிகம் என்ற நூலை எழுதியவர்
அ) வீரமாமுனிவர் **ஆ) எச்.ஏ.கிருஷ்ணப்பிள்ளை** இ) ஜி.யூ.போப்

78. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்
அ) சடையப்ப வள்ளல் **ஆ) வள்ளல் சீதக்காதி** இ) பனு அகமது மரைக்காயர்

79. உமறுப்புலவரின் மற்றொரு நூல்
**அ) முதுமொழி மாலை** ஆ) போற்றித் திருஅகவல் இ) அல்லா அருள்வேட்டல்

80. கிறித்தவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் எனப் போற்றப்பெறும் நூல்
அ) இரட்சணிய யாத்திரிகம் ஆ) **தேம்பாவணி** இ) திருக்காவலூர்க் கலம்பகம்

81. சிற்றிலக்கிய வகைகள்
(அ) **96** (ஆ) 108 (இ) 69

82. வடமொழியில் இராமாயணத்தை இயற்றியவர்.
(அ) வியாசர் (ஆ) நக்கீரர் (இ) **வான்மீகி**

83 திருக்குறளில் பொருட்பாலின் அதிகாரங்கள்.
(அ) 38 (ஆ) 25 (இ) **70**

84. மருகி என்னும் சொல்லின் பொருள்.
(அ) மகள் (ஆ) **மருமகள்** (இ) தங்கை

## திணை, துறைகள் விளக்கம்

1. **பொதுவியல் திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**பொதுவியல் திணை :**

வெட்சி முதல் பாடாண் முடிய உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும், அவற்றிற்குப் பொதுவான செய்திகளையும் கூறுவது.

**எ.கா.** ‘பல்சான்றீரே, பல்சான்றீரே’ என்னும் புறநானூற்றுப் பாடல்

**விளக்கம்:**

‘பிறருக்கு நல்லது செய்யாவிட்டாலும், தீமை செய்யாமல் இருப்பதே சிறந்த வாழ்க்கை ‘ என்ற பொதுவான கருத்தை விளக்குவதால் இப்பாடல் பொதுவியல் திணையாகும்.

2. **பொருண்மொழிக் காஞ்சித்துறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**பொருண்மொழிக் காஞ்சித்துறை:**

முனிவரும் அவரைப் போன்ற சான்றோர்களும், மக்களுக்குத் தேவையான உறுதி தரும் நிலையான கருத்துகளை எடுத்துக் கூறுவது.

**எ.கா.** பல்சான்றீரே ……… எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்
"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

**விளக்கம்:**
பிறருக்கு நல்லது செய்யாவிட்டாலும், தீமை செய்யாமல் இருப்பதே சிறந்த வாழ்க்கை என்ற உறுதியான கருத்தைக் கூறுவதால் இப்பாடல் பொருண்மொழிக்காஞ்சித் துறையாகும்.

## அணிகள்

1. அகழ்வாரைத் தாங்கும்நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை . **உவமை அணி**

**அணி விளக்கம்:**
செய்யுளில் உவமை,உவமேயம், உவமஉருபு வெளிப்படையாய் நிற்குமானால் அஃது உவமை அணி ஆகும் .
**உவமை** – அகழ்வாரைத் தாங்கும் நிலம்
**உவம உருபு** – போல
**உவமேயம்** - தம்மை இகழ்வாரைப் பொறுப்பவர்
**பொருத்தம்**: தோண்டுகின்றவரையும் தாங்கிக் கொள்ளும் நிலத்தைப்போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்துக்கொள்ளல் தலை சிறந்த பண்பாகும்.

2. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை - **எடுத்துக்காட்டு உவமைஅணி**
**அணி விளக்கம்:**
உவமை ஒரு தொடராகவும், உவமேயம் ஒரு தொடராகவும் அமைய இடையில் போல, போன்ற உருபுகள் மறைந்து வருவது எடுத்துக்காட்டு உவமைஅணி ஆகும்.
**உவமை** - இன்மையுள் இன்மை விருந்து ஒரால்
**உவமேயம்** - வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை
இடையில் போல என்ற உவமஉருபு மறைந்து வந்துள்ளது.
**பொருத்தம்:**
ஒருவனுக்கு வறுமையானது தன்னிடம் வரும் விருந்தினரை உபசரிக்க இயலாது போகும் நிலை(அது போல)வலிமையுள் சிறந்த வலிமை அறிவிலார் செய்யும் தவறுகளைப் பொறுத்துக்கொள்வதே ஆகும்.

3. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்படார் சால்பின் வரைத்து - **சொற்பொருள் பின்வருநிலையணி**
**அணி விளக்கம் :**
செய்யுளில் இடம் பெறும் ஒரு சொல் அதே பொருளில் பலமுறை பயின்று வருதல் சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.
**அணி பொருத்தம் :** இப்பாடலில் உதவி என்னும் சொல் நன்மை செய்தல் என்னும் பொருளில் மூன்றுமுறை வந்துள்ளது. செய்யும் உதவி எவ்வித அளவை உடையதும் இல்லை. அந்த உதவியானது உதவி செய்யப்பட்டவரின் தகுதியையே அளவாகக் கொண்டது. எனவே சொற்பொருள் பின்வருநிலையணி என்பது இக்குறளுக்குப் பொருத்தமாயிற்று

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. **கம்பர் பெருமையைச் சுட்டும் தொடர்களைக் கூறுக.**
கவிசக்கரவர்த்தி, கல்வியில் பெரியவன் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தமென்னும் ஒண்பாவில் உயர் கம்பன் இவை கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்கள் ஆகும்.

2. **கம்பர் இயற்றிய வேறு நூல்கள் யாவை?**
சரசுவதி அந்தாதி, சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம்.

3. **நாடோறும் எதனைப் பாடுதல் வேண்டும்?**
இந்திய நாடு என்னுடைய தாய்நாடு என்று இந்தியர் ஒவ்வொருவரும் நாள்தோறும் பாடுதல் வேண்டும்.

4. **எட்டுத்தொகை நூல்கள் யாவை?**
நற்றிணை,குறுந்தொகை,ஐங்குறுநூறு,அகநானூறு,கலித்தொகை,பதிற்றுப்பத்து,பரிபாடல், புறநானூறு.

5. **புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?**
முடியுடை மூவேந்தர்கள்,சிற்றரசர்கள்,அமைச்சர்கள்,சேனைத் தலைவர்கள், படைவீரர்கள், கடையேழு வள்ளல்கள்,கடைச்சங்க புலவர்கள்,பலருடைய வரலாற்றுக் குறிப்புகள், அக்கால மக்களின் வாழ்க்கைமுறை,நாகரீகம்,அரசியல்,போர்த்திறம்,சமுதாயப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் புறநானூற்றால் நன்கு அறியலாம்.

6. **அகநானூறு எத்தனை பகுதிகளாக உள்ளது? அவை யாவை?**
அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது. அவையாவன,
களிற்றியானை நிரை - 120 பாடல்கள்
மணிமிடைப்பவளம் - 180 பாடல்கள்
நித்திலக்கோவை – 100 பாடல்கள்

7. **சிலம்பு கூறும் மூன்று உண்மைகள் யாவை?**
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

8. **தேம்பாவணி-பொருள் கூறுக.**
தேம்பா + அணி எனப் பிரித்தால் வாடாத மாலை என்றும், தேன் + பா +அணி எனப் பிரித்தால் தேன் போன்ற பாக்களை அணியாக உடையது என்றும் பொருள்படும்.

09. **உலா என்பதன் பொருள் யாது?**
உலா என்பதற்குப் பவனிவரல் என்பது பொருள். தலைவன் வீதியில் உலா வர ஏழுவகை பருவப் பெண்களும் அவன் மீது காதல் கொள்வதாகப் புனைந்து பாடுவது உலாவாகும்

10. **அந்தாதி-விளக்குக?**
ஒவ்வொரு பாடலில் உள்ள இறுதியெழுத்தோ அசையோ, சீரோ, அடியோ அதற்கடுத்து வரும் பாடலின் முதலாய் வரும்படி அமைத்துப்பாடுவது அந்தாதி எனப்படும்.

11. **கலம்பகம் - பெயர்க்காரணம் தருக?**
கலம்பகம் = கலம் + பகம் எனப் பிரிக்கலாம். கலம் - பன்னிரண்டு பகம் - பாதி ஆறு ஆக 18 உறுப்புகள் அமையப் பாடப்படுவதால் கலம்பகம் எனப்பெயர் பெற்றது.

12. **முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை?**
தண்பொருநை , சிற்றாறு, கோதண்டராம ஆறு.

**13. துன்பம் எவ்வாறு சிதறிப்போகும்?**

தந்தை பெரியார் போல அளவாய், தகுதிக்கேற்ப ஒவ்வொரு நாளும் செலவு செய்து வாழ்ந்தால், பாறாங்கல் மீது விழுந்த மழைநீர் உடனே சிதறிவிடுவது போலத் துன்பம் பறந்தோடும்.

**14. தேவார மூவர் யாவர்?**

அப்பர், சம்பந்தர், சுந்தரர்

**15. சுந்தரர் தம்பிரான் தோழர் என அழைக்கப்படக் காரணம் யாது?**

சிவன், சுந்தரரைத் தம் தோழராய்க் கொண்டமையால் அவர் தம்பிரான் தோழர் என அழைக்கபபட்டார்.

**16. எச்.ஏ கிருஷ்ணப்பிள்ளை இயற்றிய வேறு நூல்கள் யாவை?**

இரட்சணிய மனோகரம், இரட்சணியக்குறள், இரட்சணிய சமயநிர்ணயம், போற்றித் திருவகவல் ஆகியன.

**17. பாவேந்தர் நூல்களுள் நான்கின் பெயர் தருக.**

குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, பிசிராந்தையார் நாடகம்.

**18. வீரமாமுனிவர் இயற்றிய நூல்கள் யாவை,?**

செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், சதுரகராதி, பரமார்த்த குரு கதை, வேதியர் ஒழுக்கம், கித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம்.

## நான்கு மதிப்பெண் வினாக்கள்

**1) இறைவாழ்த்துப் பாடலால் அறியலாகும் செய்திகளைக் கூறுக.?**

1) இறைவன் ஒருவனே என்று நினைத்தால் ஒருவனேயாவான். இறைவன் பல உருவங்களைக் கொண்டவன் என்று நினைத்தால் அவ்வாறே காட்சியளிப்பான்.

2) இறைவன் 'இல்லை' என்று கூறுவோருக்கு இல்லாதவனாகவும், இறைவன்'உண்டு'என்போருக்குஉள்ளவனாகவும் காட்சியளிப்பான்.

3) இறைவனை இன்றே காணலாம் என்று நம்புவோரால் காண இயலும். இறைவனால்தான் உலக உயிர்கள் வாழ்கின்றன.

4) இத்தகைய சிறப்பு கொண்ட இறைவனின் பாதங்களைப் பற்றுக் கோடாகக் கொண்டால்தான் உலக உயிர்கள் வாழ இயலும். இறைவனைச் சரணடைவது ஒன்று மட்டுமே மனிதர்களாகிய நம்மால் செய்ய இயலும்.

**2) வரதநஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகின்றார்?**

1) இளமைப் பருவத்தில்நம் நாவையசைத்துப் பேச உதவி செய்த மொழி தமிழ்மொழி

2) அறிவுக் கண்களைத் திறந்து உலக நடப்புகளை அறிந்து கொள்ள உதவிய மொழி நம் தமிழ்மொழி.

3) நம் சிந்தனையை மற்றவர்க்குத் தெரிவிக்க கருவியாக இருந்த திருத்தமான மொழி நம் தமிழ்மொழி .

4) வேற்று மொழிகள் பலவற்றைக் கற்க உதவி செய்த மொழி நம் தமிழ்மொழி

5) இத்தகைய சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதால் நம் தமிழன்னையை "வாழ்க வாழ்க" என வாழ்த்துவோம் என்று வரதநஞ்சையப் பிள்ளை தமிழன்னையை வாழ்த்துகிறார்.

**3)இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கைக்கொள்ளல் வேண்டும்? ஏன்?**

1) இந்திய நாடு என்னுடைய நாடு எனக்கே உரிமையான நாடு என்று நாள்தோறும் போற்றிப் பாடுதல் வேண்டும். 2) நமக்குச் சிறிதும் சொந்தமில்லாத அந்நியர்கள் நம் இந்தியாவை ஆட்சி செய்ய இந்தியர்கள் அனைவரும் அடிமைப்பட்டுக் கிடந்தனர். அக்காலமெல்லாம் கடந்து சென்று விட்டது. 3) நம் நாட்டை ஆட்சி செய்த வெள்ளையர்கள் "நம் வாழ்வு மலர உதவ மாட்டார்களா?" என்று இந்தியர்கள் வாடிக்கிடந்தனர். அந்தக் காலமும் கடந்து சென்று விட்டது. 4) இந்தத் தினம் முதல் இந்திய நாடு என்னுடைய நாடு எனக்கே உரிமையான நாடு என்ற எண்ணத்தை நாம் ஒவ்வொருவரும் கைக்கொள்ளல் வேண்டும்.

4) **பொறையுடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் வழிநின்று கூறுக?**

பூமியானது தம்மைத் தோண்டுபவரையும் பொறுமையோடு தாங்கிக் கொள்ளும். அதுபோல நம்மை இகழ்ந்து பேசுவோரை நாம் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்ளுதல் நன்று. அத்தீங்கை மறந்துவிடுதல் அதைவிட நன்று.

வறுமைக்கெல்லாம் வறுமை விருந்தினர்களை உபசரிக்காமல் இருப்பது. அதுபோல வலிமைக்கெல்லாம் வலிமை அறிவற்றவர்களின் தீயசொற்களைப் பொறுத்துக் கொள்ளுதலாகும்.

நிறைப்பண்பு (சால்புடைமை) நம்மை விட்டு நீங்காமல் இருக்க வேண்டுமென்றால் பொறுமை என்னும் குணத்தை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

5) **ஒறுத்தார், பொறுத்தார் குறித்துக் குறள் கூறுவன யாவை?**

பிறர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்ளாது தண்டித்தால் நம்மை இவ்வுலகம் மதியாது. பொறுத்துக் கொண்டால் பொன்போல் வைத்துப் போற்றும்.

பிறர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்ளாமல் தண்டித்தவர்களுக்கு ஒருநாள் மட்டுமே இன்பம். பொறுத்துக் கொள்பவர்களுக்கு அவர்கள் வாழ்க்கை முழுவதும் இன்பம் கிடைக்கும்.

செய்யத்தகாத கொடிய செயல்களை ஒருவர் நமக்குச் செய்தாலும் அதற்காக மனம் வருந்தலாம். ஆனால் அறத்திற்கு மாறான செயல்களை நாம் செய்யாமல் இருப்பது நன்றாகும்.

அளவு கடந்த துன்பத்தை ஒருவர் நமக்குச் செய்தாலும் அவரை நாம் பொறுமை என்னும் குணத்தால் வெற்றி கொள்ள வேண்டும்.

6) **அறிவுடையாரின் இலக்கணங்களாக வள்ளுவர் கூறியனவற்றை எழுதுக?**

அறிவுடையவர்கள் பின்னால் நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து கொள்வர். அறிவில்லாதவர்கள் அவ்வாறு அறியும் திறமில்லாதவர்கள்.

ஒருவன் அஞ்சவேண்டிய பழிபாவங்களுக்கு அஞ்சாமல் இருப்பது அறியாமையாகும். அஞ்ச வேண்டிய பழிபாவங்களுக்கு அஞ்சி வாழ்வது அறிவுடையார் செயலாகும்.

7) **வினைத்திட்பத்தின் சிறப்பும், அஃதுடையார் எய்தும் பயனும் குறித்து எழுதுக.**

பெருமைக்குரிய அமைச்சரின் மனவலிமை அவ்வரசனுக்குச் சிறப்பை உண்டாக்குவதால் அவ்வமைச்சன் யாவராலும் மதிக்கப்படுவான்.

ஒரு செயலைச் செய்து முடித்து விடுவேன் என்று நினைப்பவர்கள் மனவலிமை கொண்டவர்கள் ஆவர்.

8. **இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை,?**

- வில் - இந்திரனை வென்றது, பெருங்கடலை வற்றச் செய்தது.
- வாள் - சோழ நாட்டிற்குக் காவிரி செல்ல மலையை வெட்டி வழி அமைத்தது. வானத்தில் அசைந்த நகரத்தை அழித்தது.
- முரசு – சேரனை வென்று பெற்ற கடப்பமரத்தால் செய்யப்பட்டது. காவிரிக்கு அணைகட்ட பகைவரை மண் சுமக்கச் செய்தது.
- கொடி – மேருமலையை வலம் வந்தது. இந்திரனைப் புலியாகக் கொண்டது.
- குடை – மக்களைக் காப்பதற்கு அண்ட கூடத்தை ஒத்து நின்றது.

9. **தென் கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.**
**தென்கரை நாட்டின் வளம்**

(1) தென்கரை நாட்டில் வெயில் காயும் - ஆனால் மக்களின் வயிறு காயாது
(2) தயிர் மட்டுமே கலங்கும். அங்குள்ள மக்கள் மனம் கலங்கார்.
(3) நாழிகையும் வாரமுமே மாயும். மக்கள் பசியால் மாயார்
(4) வெள்ளம் மட்டுமே மறுகி ஓடும். ஆனால் மக்கள் மறுகி வாடார்.
(5) முற்றிய செந்நெல் தலைசாயும். ஆனால் மக்கள் எதற்காகவும் தலை குனிய மாட்டார்.
(6) முனிவர் மட்டுமே தனித்து இருப்பர்,கணவன் மனைவியாக வாழ்பவர் தனித்து இருக்க மாட்டார்.
(7) சந்தனம் மட்டுமே தேயும் , அங்கு உள்ள பெண்கள் தூது உரைத்து தேய்வது இல்லை.

10. **பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை?**

மாலை நேரத்தில் வானத்தில் தோன்றும் பிறைச் சந்திரனைத் தலையில் சூடிய சிவபெருமானும்,பிரம்மனும்,இந்திரனும்,வேதம் முதலிய நூல்களைப் போற்றும் முனிவர்களும், முப்பத்து முக்கோடித்தேவர்களும், தம் உள்ளத்தில் நிறுத்தி காலையிலும் மாலையிலும் வணங்கும் மலையே பெருமாள் உறை திருவேங்கட மலையாகும்.

11. **தலைவி மேகத்திடம் மொழிந்த தூது மொழிகள் யாவை?**

திருமாலைப் போன்று கரிய நிறம் உடைய, மேலும் சந்தன மரங்கள் நிறைந்த பொதிகை மலைச்சாரலில் தங்கியுள்ள மேகங்களே! மாலை நேர பிறைச்சந்திரனும், இரை தேடுகின்ற குயிலின் குஞ்சும் என் உயிரை வாயிலிட்டுப் புசிக்கின்றன.

அதனால் மேகங்களே இச்செய்தியைக் கயிலாய மலையிலும், மேரு மலையிலும், பொதிகை மலையிலும் எழுந்தருளி உள்ளவனும் தடாதகைப் பிராட்டியின் கணவருமாகிய மதுரைச் சொக்கநாதப் பெருமானிடம் சென்று சொல்வீர்களாக.

12. **சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை?**

(1) பல்கலைக்கழகங்களில் இருப்பது போலத் தமிழ்மொழியில் சுவடிச்சாலைகள் இருக்க வேண்டும்.

(2) தமிழ் மொழி நூல்கள் இருக்க வேண்டும்.

(3) மொழி பெயர்ப்பு நூல்கள் இருக்க வேண்டும்.

(4) அமுதம் போன்ற கவிதை நூல்கள் இருக்க வேண்டும்.

(5) நல்ல கருத்துடைய உரைநடை நூல்களும் இருக்க வேண்டும்.

(6) இவற்றைச் சுவடிச்சாலையில் துறைதுறையாய் பிரித்தடுக்கி வைக்க வேண்டும்.

13. **சிக்கனத்தால் வரும் பயன்கள் யாவை?**

1) நாம் பேரோடும், புகழோடும் வாழ்வதற்கு நம்மிடமுள்ள பேரறிவே துணை செய்யும். அதுபோல் நாம் சீரோடும், சிறப்போடும் வாழ சிக்கனமே துணைபுரியும். 2) இருக்கும் பணத்தையெல்லாம் பகட்டாக வாழ்ந்து செலவு செய்தால் நம் வாழ்வு நீராவியைப் போன்று ஒன்றுக்கும் உதவாமல் போய்விடும். 3) சிக்கனத்தோடு கூடிய வாழ்க்கை நீரூற்றைப் போன்று பயன் தருவதாகும். 4) சிக்கனத்தைக் கடைப்பிடிக்காமல் பகட்டாக வாழ்ந்தவர்கள் இறுதியில் வறுமையுற்று துன்பப்படுவர். 5) ஆடம்பரமான வாழ்க்கை கணநேரத்தில் மறையும் நீராவியைப் போன்றது. சிக்கனத்தோடு கூடிய வாழ்க்கை மேன்மேலும் பெருகும் நீரூற்றைப் போன்றது.

14. **குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?**

**குலசேகர ஆழ்வார் வேண்டுவது:-**

திருவேங்கட மலையில் உள்ள சுனையில் மீனாய்ப் பிறக்க வேண்டுகிறார்.

**வேண்டாதது:-**

குறையாத செல்வத்தோடு விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் ஆளும் பதவியை வேண்டாம் என்கிறார்.

# நெடுவினா - திருக்குறள்

1) **'செய்ந்நன்றியறிதல்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கூறுக.**

**செய்ந்நன்றிக்கு அளவு இல்லை:–**

நாம் எந்த உதவியும் செய்யாமல் இருக்க, பிறர் நமக்குச் செய்யும் உதவிக்கு மண்ணுலகையும், விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது. காலமறிந்து ஒருவர் செய்த உதவி மிகச் சிறிதாக இருந்தாலும் அது இந்நிலவுலகைவிடப் பெரியதாகும். நம்மிடம் எந்தப் பயனையும் எதிர்பாராமல் ஒருவர் செய்த உதவியின் தன்மையை ஆராய்ந்து பார்த்தால் இது கடலைவிடப் பெரியதாகும்.

**செயந்நன்றியை ஏற்றுக்கொள்வோர் திறம்:–**

தினை அளவு ஒருவர் உதவி செய்தாலும், அவ்வுதவியின் தன்மையை உணர்ந்தவர்கள் அதைப் பனையளவாக ஏற்றுக்கொள்வர். ஒருவர் செய்யும் உதவியின் அளவு என்பது அதன் மதிப்பைப் பொறுத்தது அன்று. அவ்வுதவியைப் பெற்றவருடைய தகுதி எவ்வளவினதோ அவ்வளவைப் பொறுத்தாகும்.

**நன்றி செய்தாரது நட்பை விடலாகாது:–**

குற்றமற்ற நல்லவர்களின் நட்பை மறந்துவிடுதல் கூடாது. துன்பத்தில் உதவியவர்களின் நட்பைக் கைவிடுதல் கூடாது. ஆபத்துக் காலத்தில் உதவியவர்களின் நட்பை ஏழேழு பிறவிகளிலும் மறத்தல் கூடாது.

**மறக்க வேண்டியதும், மறக்கக் கூடாததும்:–**

ஒருவர் செய்த உதவியை மறந்து விடுதல் நன்றாகாது. ஆனால் ஒருவர் செய்த தீமையை அன்றே மறந்துவிடுதல் நன்றாகும்.

**நன்றல்லதை அன்றே மறக்கும் திறம்:–**

கணக்கிலடங்கா தீங்குகளை ஒருவர் நமக்குச் செய்தாலும், அவர் என்றோ செய்த ஒரு நன்மையைக் கணக்கில்கொண்டு அவர் செய்த தீங்கை மறந்து, மன்னித்து விடுதல் நன்றாகும்.

**செய்ந்நன்றி மறந்தாரின் நிலை:–**

எந்தப் பாவங்களை நாம் செய்தாலும் அதிலிருந்து நீங்குவதற்கு வழியுண்டு. ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தால் அப்பாவத்திலிருந்து நீங்குவதற்கு வழியேயில்லை.

**2) 'பொறையுடைமை' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**பூமிபோல் தாங்கு:**

பூமியானது தம்மைத் தோண்டுபவரையும், பொறுமையோடு தாங்கிக் கொள்ளும். அதுபோல நம்மை இகழ்ந்து பேசுவோரை நாம் தாங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்ளுதல் நன்று. அத்தீங்கை மறந்துவிடுதல் அதைவிட நன்று.

பொறுமையே வலிமை:-

வறுமைக்கெல்லாம் வறுமை விருந்தினர்களை உபசரிக்காமல் இருப்பது. அதுபோல வலிமைக்கெல்லாம் வலிமை அறிவற்றவர்களின் தீயசொற்களைப் பொறுத்துக் கொள்ளுதலாகும். நிறைப்பண்பு (சால்புடைமை) நம்மை விட்டு

நீங்காமல் இருக்க வேண்டுமென்றால் பொறுமை என்னும் குணத்தை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

பொறுத்தவருக்குக் கிடைப்பவை:

பிறர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்ளாமல் தண்டித்தவர்களுக்கு ஒருநாள் மட்டுமே இன்பம். பொறுத்துக் கொள்பவர்களுக்கு அவர்கள் வாழ்க்கை முழுவதும் இன்பம் கிடைக்கும். பிறர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்ளாமல் தண்டிப்பவர்களை உலகத்தார் ஒரு பொருட்டாக மதிக்க மாட்டார்கள். ஆனால் பொறுத்துக் கொள்பவர்களைப் பொன்போல் வைத்துப் போற்றுவர்.

பொறுமையால் வெற்றி:-

செய்யத்தகாத கொடிய செயல்களை ஒருவர் நமக்குச் செய்தாலும் அதற்காக மனம் வருந்தலாம். ஆனால் அறத்திற்கு மாறான செயல்களை நாம் செய்யாமல் இருப்பது நன்றாகும். அளவு கடந்த துன்பத்தை ஒருவர் நமக்குச் செய்தாலும் அவரை நாம் பொறுமை என்னும் குணத்தால் வெற்றி கொள்ள வேண்டும்.

பொறுப்பவரே உயர்ந்தவர்:-

தீயவர் நமக்குச் செய்யும் தீங்கினால் நேரும் துன்பத்திற்கு வருந்தி, நாமும் அவர்க்குத் தீங்கு செய்யாது பொறுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு பொறுப்போர் துறவியினும் தூய்மையுடையவர் ஆவார். உணவுப் பசியை அடக்கிவாழும் பெரியோரைவிட பிறர்கூறும் இன்னாச் சொல்லைப் பொறுப்பவர் மேம்பட்டவர்.

**3) 'அறிவுடைமை' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

அறிவு என்பது……:-

அறிவானது ஆபத்துக் காலத்தில் நம்மைப் பாதுகாக்கும் கருவியாகும். பகைவராலும் அழிக்க முடியாத கோட்டையாக விளங்குவது அறிவாகும். மனம் தீயவழியில் சென்றால், அவ்வாறு செல்லவிடாமல் தடுத்து, நல்வழியில் செலுத்துவது அறிவாகும். எந்தப்பொருளையார் சொல்லக் கேட்டாலும், அப்பொருளில் உள்ள உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிவது அறிவாகும்.

அறிவாளியின் செயல்:-

அரிய கருத்துகளைப் பிறர்க்கு எளிதாகப் புரியுமாறும், விரும்புமாறும் சொல்ல வேண்டும். பிறர் வாயிலிருந்து வரும் சொற்களில் நுண்பொருளை ஆராய்ந்து காண்பது அறிவாகும். உலகிலுள்ள, சான்றோர்களிடம் பழகி அவர்களை நட்பாக்கிக் கொள்ளுதல் அறிவுடைமையாகும். அந்த நட்பை விரியவும் விடாமல், சுருங்கவும் விடாமல் பார்த்துக் கொள்வது அறிவாகும். உலகிலுள்ள உயர்ந்த சான்றோர்கள் எவ்வழியில் செல்கிறார்களோ அதே வழியில் நாமும் ஒன்றி வாழ்வதே அறிவாகும்.

அறிவுடையோரின் தனிச்சிறப்பு:-

அறிவுடையவர்கள் பின்னால் நடக்கப் போவதை முன்கூட்டியே அறிந்து கொள்வர். அறிவில்லாதவர்கள் அவ்வாறு அறியும் திறமில்லாதவர்கள். ஒருவன் அஞ்சவேண்டிய பழிபாவங்களுக்கு அஞ்சாமல் இருப்பது அறியாமையாகும். அஞ்ச வேண்டிய பழிபாவங்களுக்கு அஞ்சி வாழ்வது அறிவுடையார் செயலாகும்.

அறிவே செல்வம்:-

எதிர்காலத்தில் நிகழ இருப்பதை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் அறிவுடையவர்களுக்கு அவர்கள் உடலும், மனமும் நடுங்கும்படியான துன்பம் வராது. அறிவுடையவர்கள் அறிவு என்னும் செல்வம் இருப்பதால் எல்லாச் செல்வங்களையும் உடையவராகவே கருதப்படுவார். ஆனால் அறிவிலார் எத்தகைய செல்வம் இருந்தாலும் அறிவுச் செல்வம் இல்லாததால் ஒன்றும் இல்லாதவராகவே கருதப்படுவார்.

**4) 'வினைத்திட்பம்' என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக ?**

மனவலிமையின் இயல்பு:-

செயல்வலிமை என்பது ஒருவரின் மனவலிமையைப் பொறுத்தது. மற்ற வலிமைகள் எல்லாம் வேறானவை. பழுதுபடும் வினையைச் செய்யாதிருத்தல், ஒருவேளை அச்செயலில் துன்பம் வந்தால் மனம் தளராமல் இருத்தல், இவ்விரண்டும் மனவலிமை கொண்டவர்களின் கொள்கையாகும்.

திறமையைச் செயலில் காட்டு:,-

எந்த ஒரு செயலாக இருந்தாலும் முடிவில் வெளிப்படுமாறு செய்வதே ஆண்மையாகும். இடையில் வெளிப்படுமாறு செய்தால் அது நமக்குத் தீங்கைத் தரும். ஒரு செயலைச் செய்துவிடுவேன் என்று கூறுவது எளிய செயலாகும். ஆனால் அச்செயலைக் கூறியபடி செய்து காட்டுவது அரிய செயலாகும்.

வினைத்திட்பம் தருவது:-

பெருமைக்குரிய அமைச்சரின் மனவலிமை அவ்வரசனுக்குச் சிறப்பை உண்டாக்குவதால் அவ்வமைச்சன் யாவராலும் மதிக்கப்படுவான்.
ஒரு செயலைச் செய்து முடித்து விடுவேன் என்று நினைப்பவர்கள் மனவலிமை கொண்டவர்களாக இருந்தால், அவர்கள் கூறிய செயலைக் கூறியபடியே முடித்துவிடுவர்.

உருவத்தைவிட செயலே சிறந்தது:-

உருள்கின்ற பெரிய அழகான தேருக்குச் சிறிய அழகற்ற அச்சாணி பயன்படுகிறது. அதுபோல ஒருவரின் உருவத்தைப் பார்த்து இவர் இச்செயலைச் செய்ய இயலாதவர் என்று எள்ளி நகையாடுதல் கூடாது.
மனம் தெளிந்து, செய்யத் துணிந்த செயலினைச் சோர்வுநீக்கி, காலம் தாழ்த்தாது அந்தச் செயலை விரைந்து முடித்துவிடுதல் வேண்டும்.

செயல் இல்லையா? புகழும் இல்லை :-

ஒரு செயலின் இறுதியில் இன்பம் கிடைக்குமென்றால் எவ்வளவு துன்பம் வந்தாலும் துணிவுடன் அச்செயலைச் செய்து முடித்து விடுதல் வேண்டும்.
உடல் வலிமை, பணவலிமை, படை வலிமை இருப்பினும் மனவலிமை இல்லாதவரை இவ்வுலகம் ஒரு பொருட்டாக மதிக்காது.

## செய்யுள் அடி வினா - விடைகள்

1. **"யாருமில்லைத் தானே கள்வன்**
**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"?**

அ. இதில் கள்வன் எனக் குறிப்பிட்டவன் யாவன்?
ஆ. இது யார் யாரிடம் கூறிய கூற்று?
இ. இக்கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார்?
ஈ. இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது?

**விடைகள் : அ. தலைவன் ஆ. தலைவி, தன் தோழியிடம்**
**இ. கபிலர் ஈ. குறுந்தொகை**

**2. " நெடுந்தேர் ஊர்மதி வலவ**
**முடிந்தன்று அம்ம நாம் முன்னிய வினையே"**

அ. இ.்.து யார் யாரிடம் கூறிய கூற்று?
ஆ. "வலவ" என்று குறிக்கப்படுபவன் யார்?
இ. இச்செய்யுளைப் பாடிய புலவர் யார்?
ஈ. "முடிந்தன்று" என்று பாடலில் கூறப்பட்டுள்ளது எது?

**விடைகள் : அ. தலைவன் தேர்ப்பாகனிடம் ஆ. தேர்ப்பாகன்**
**இ. மதுரை மள்ளனார் ஈ. தலைவன் எண்ணிவந்த செயல்**

**3. "நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்"**

அ. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
ஆ. இப்பாடலின் ஆசிரியர் யார்?
இ. ஆற்றீராயினும் எது?
ஈ. ஓம்புமின் பொருள்கூறு.

**விடைகள் : அ. புறநானூறு ஆ. நரிவெரூஉத் தலையார்**
**இ. நல்லவற்றைச் செய்யாவிடினும் ஈ. தவிர்த்துவிடுங்கள்**

4. **"திங்களொன்றிருப்பன் இன்னே ; திருவுளம் தீர்ந்தபின்னை**
**மங்குவென் உயிரோடென்றுன் மலரடி சென்னி வைத்தாள்"**

அ. இதனைக் கூறியவர் யார்?
ஆ. யாரிடம் கூறினார்?
இ. இவ்வடி இடம் பெற்ற நூலின் பெயர் யாது?
ஈ. "மலரடி சென்னி வைத்தாள்" - எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

**விடைகள் : அ. அனுமன் ஆ. இராமனிடம்**
**இ. கம்பராமாயணம் ஈ. சீதை**

**5."கடமை புரிந்தான் இவனே"**

அ. இதனைக் கூறியவர் யார்?

ஆ. யாரிடம் கூறினார்?

இ. கடமை புரிந்தவன் யார்?

ஈ. இவ்வடி இடம் பெற்ற நூலின் பெயர் யாது?

**விடைகள் : அ. ஆத்தாக்கிழவி ஆ. அன்னத்திடம்**

**இ. வேலன் ஈ. பாண்டியன் பரிசு**

**மனப்பாடப் பகுதி**

## 1.திருக்குறள் 2 அதிகாரங்கள் - 40 அடிகள்
## 2.பிறபாடல்கள் - 46 அடிகள்

## பாவகை அறிந்து, எழுத்துப்பிழையின்றி அடிபிறழாமல் எழுதுக.

. **பொருத்துக.**

1. **திணை** --- **பாடியோர்** **விடை**

| | | | |
|---|---|---|---|
| அ) குறிஞ்சி | --- | 1) ஓரம்போகியார் | அ – 4 |
| ஆ) முல்லை | --- | 2) அம்மூவனார் | ஆ – 5 |
| இ) மருதம் | --- | 3) ஓதலாந்தையார் | இ – 1 |
| ஈ) நெய்தல் | --- | 4) கபிலர் | ஈ – 2 |
| | --- | 5) பேயனார் | |

2. **நூல்** --- **ஆசிரியர்** **விடை**

| | | | |
|---|---|---|---|
| அ)மணிமேகலை | --- | 1) கிருஷ்ணப்பிள்ளை | அ – 3 |
| ஆ)தேவாரம் | --- | 2) உமறுப்புலவர் | ஆ – 4 |
| இ)சீறாப்புராணம் | --- | 3) சீத்தலைச்சாத்தனார் | இ – 2 |
| ஈ)இரட்சணிய யாத்திரிகம் | -- | 4) சுந்தரர் | ஈ – 1 |
| | --- | 5) குணங்குடி மஸ்தான் | |

3. **நூல்** --- **சமயம்** **விடை**

| | | | |
|---|---|---|---|
| அ) மணிமேகலை | --- | 1) சமணம் | அ – 4 |
| ஆ) நீலகேசி | --- | 2) கிறித்தவம் | ஆ – 1 |
| இ) இரட்சணிய யாத்திரிகம் | --- | 3) இசுலாம் | இ – 2 |
| ஈ) சீறாப்புராணம் | --- | 4) பௌத்தம் | ஈ – 3 |
| | --- | 5) வைணவம் | |

| 4. | நூல் | --- | ஆசிரியர் | விடை |
|---|---|---|---|---|
| | அ) இராசராசசோழனுலா | --- | 1) பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் | அ – 4 |
| | ஆ) திருவேங்கடத்தந்தாதி | -- | 2) குமரகுருபரர் | ஆ – 1 |
| | இ) மதுரைக் கலம்பகம் | --- | 3) ஆசிரியர் பெயர் அறியவில்லை | இ – 2 |
| | ஈ) முக்கூடற்பள்ளு | --- | 4) ஒட்டக்கூத்தர் | ஈ – 3 |
| | | | 5) காரைக்கால் அம்மையார் | |

| 5. | புலவர்கள் | --- | இயற்றிய நூல்கள் | விடை |
|---|---|---|---|---|
| | அ) இளங்கோவடிகள் | --- | 1) மணிமேகலை | அ – 2 |
| | ஆ) திருத்தக்க தேவர் | --- | 2) சிலப்பதிகாரம் | ஆ – 3 |
| | இ) நாதகுத்தனார் | --- | 3) சீவகசிந்தாமணி | இ – 5 |
| | ஈ) சீத்தலைச்சாத்தனார் | ---- | 4) வளையாபதி | ஈ – 1 |
| | | --- | 5) குண்டலகேசி | |

# பகுபத உறுப்பிலக்கணம்

**மாதிரி**

**1. பூட்டி = பூட்டு + இ**
**பூட்டு – பகுதி**
**இ – வினையெச்ச விகுதி**
**2. தோன்றி = தோன்று + இ**
**3. எய்தி = எய்து + இ**
**4. ஏந்தி = ஏந்து + இ**
**5. இறைஞ்சி = இறைஞ்சு + இ**
**6. நோக்கி = நோக்கு + இ**
**7. முழங்கி = முழங்கு + இ**
**8. போற்றி = போற்று + இ**

**மாதிரி**

**1. வாழ்க = வாழ் + க**
**வாழ் - பகுதி**
**க - வியங்கோள் வினைமுற்று விகுதி**
**2.ஒழிக = ஒழி + க**
**3.ஓங்குக = ஓங்கு + க**
**4.உயர்க = உயர் + க**
**5.செய்க = செய் + க**

**மாதிரி**

**1. ஓம்புமின் = ஓம்பு + மின்**
**ஓம்பு – பகுதி**
**மின் - ஏவல்பன்மை வினைமுற்று விகுதி**

2. உணர்மின் = உணர் + மின் மாதிரி

1. புகலீர் = புகல் + ஈர்
புகல் – பகுதி
ஈர் = ஏவல்பன்மை வினைமுற்று விகுதி
2. காணீர் = காண் + ஈர்
மாதிரி
1. குனிந்து = குனி + த்(ந்) + த் + உ
குனி – பகுதி
த் - சந்தி ('ந்' ஆனது விகாரம்)
த் - .இறந்த கால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி
2.திறந்து = திற + த்(ந்) + த் + உ
3.ஒழிந்து = ஒழி + த்(ந்) + த் + உ

மாதிரி
1. அசைத்த = அசை + த் + த் + அ
அசை – பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி.
2. ஆர்த்த – ஆர் + த் + த் + அ

# இலக்கணக் குறிப்பு

**பண்புத் தொகை: 'மை' விகுதி மறைந்து வருவது**

| | | | |
|---|---|---|---|
| கூர்ம்படை | கருங்காக்கை | தண்குடை | கருமுகில் |
| நெடுந்தேர் | நெடுந்தகை | பச்சூன் | முதுமரம் |
| பசுங்கால் | பெருந்தேர் | நல்லுரை | வெஞ்சுடர் |
| முச்சங்கம் | முக்குடை | தீநெறி | |

**வினைத் தொகை: காலம் மறைந்து வருவது**

| | | | |
|---|---|---|---|
| திருந்துமொழி | திரைகவுள் | புனைகலம் | |
| ஒழுகுநீர் | படர்முகில் | அலைகடல் | வீங்குநீர் |
| உறுகுறை | களிநடம் | படர்முகில் | |
| விரிநகர் | தாழ்பிறப்பு | ஈர்வளை | அலைகடல் |
| உயர்எண்ணம் | உறைவேங்கடம் | அகல்முகில் | நிறைமதி |

**அடுக்குத்தொடர்: ஒரே சொல் அடுக்கி வருவது**

| | | | |
|---|---|---|---|
| தினந்தினம் | அறைந்தறைந்து | வாழியவாழிய | |
| சுமைசுமையாய் | துறைதுறையாய் | விக்கிவிக்கி | புடைபுடை |

**உரிச்சொல் தொடர்: பெயர்ச்சொல்லைச் சிறப்பிப்பது**

| | | | |
|---|---|---|---|
| மாநகர் | மல்லல்மதுரை | தடந்தோள் | கடிநகர் |
| வைவாள் | நாமவேல் | வைவேல் | மாமதுரை |
| மாமலை | | | |

செய்யுளிசை அளபெடை (இசைநிறையளபெடை): படூஉம்

சொல்லிசையளபெடை: தழீஇ, தீதொரீஇ, செலீஇய

இன்னிசையளபெடை: தாங்குறூஉம், வளர்க்குறூஉம்

**எண்ணும்மை: 'உம்' வெளிப்படையாக வருவது**

வையகமும் வானகமும் வாயிலும் மாளிகையும்
மலர்தலும் கூம்பலும் கங்கையும் சிந்துவும்
தந்தைக்கும் தாய்க்கும் விண்ணிலும் மண்ணிலும்
பேரோடும் புகழோடும் மாடமும் ஆடரங்கும்

**உருவகம்: உவமை உவமேயம் இரண்டையும் ஒன்றாக்குவது**

கண்ணீர்வெள்ளம் மதிவிளக்கு பசிக்கயிறு கைம்மலை
பொற்கரை தங்கத்திமிங்கலம் தங்கத்தோணி
வியங்கோள் வினைமுற்று: வாழிய, செய்க
**எதிர்மறை வியங்கோள் வினைமுற்று:** மறவற்க, துறவற்க

# பிரித்துப் புணர்ச்சி விதி தருக

1) உயிருண்டு = உயிர் + உண்டு

**விதி = 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்னும் விதிப்படி (ர்+உ=ரு) உயிருண்டு என்றானது**

- நானென்று = நான் + என்று ( ன் + எ = னெ )
- இருளறுத்திடும் = இருள் + அறுத்திடும் ( ள் + அ =ள )
- பகலுறை = பகல் + உறை ( ல் + உ = லு )
- அறனல்ல = அறன் + அல்ல ( ன் +அ = ன )

2) விளக்கேற்றி = விளக்கு + ஏற்றி

**விதி –1 = 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்'.** என்றவிதிப்படி விளக்க் + ஏற்றி **என்றானது**

**விதி 2 = 'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' ( க் + ஏ= கே ) விளக்கேற்றி என்றானது**

- வண்டினம் = வண்டு + இனம் (ட்+ உ = டு ) ( ட் + இ = டி)
  - மாசற்றார் = மாசு + அற்றார் ( ச் + உ = சு ) ( ச் + அ = ச )
  - நன்றன்று = நன்று + அன்று ( ற் + உ = று ) ( ற் + அ = ற )
  - சிலம்பொன்று = சிலம்பு + ஒன்று ( ப் + உ = பு ) ( ப் + ஒ = பொ )
  - அறைந்தறைந்து = அறைந்து + அறைந்து ( த் + உ = து ) (த்+அ =த)

3) முதுமரம் = முதுமை + மரம்

**விதி = 'ஈறுபோதல்' என்னும் விதிப்படி மைவிகுதி கெட்டு முதுமரம் என்றானது.**

4) பெருங்களிறு = பெருமை + களிறு

**விதி–1 = ஈறுபோதல் என்னும் விதிப்படி 'மை' விகுதி கெட்டு பெரு+களிறு என்றானது.**

**விதி–2 = இனமிகல் என்னும் விதிப்படி 'ங்' தோன்றி பெருங்களிறு என்றானது**

- பெருந்தேர் = பெருமை + தேர்
- நெடுந்தகை = நெடுமை + தகை
- பெருந்தெய்வம் = பெருமை + தெய்வம்
- செழும்பொன் = செழுமை + பொன்

5) மணிக்கழுத்து = மணி + கழுத்து

**விதி = <u>இயல்பினும், விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்</u> என்னும் விதிப்படி 'க்' தோன்றி மணிக்கழுத்து என்றானது**

- தீக்குச்சி = தீ + குச்சி
- வினைத்திட்பம் = வினை + திட்பம்
- மதிக்குடை = மதி + குடை
- பத்தினிப்பெண்டிர் = பத்தினி + பெண்டிர்
- வளைத்தோளி = வளை + தோளி
- மழைக்கண்ணீர் = மழை + கண்ணீர்
- மணிக்கழுத்து = மணி + கழுத்து

6) பூங்கொடியாள் = பூ + கொடியாள்

**விதி – <u>"பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்"</u> என்னும் விதிப்படி 'ங்' தோன்றி பூங்கொடியாள் என்றானது**

- பூஞ்சோலை = பூ + சோலை
- பூங்கொடி = = பூ + கொடி

## கோடிட்ட இடங்களை நிரப்புக

1. காலத்தினாற் செய்த **<u>நன்றி</u>** சிறிதெனினும்

   **<u>ஞாலத்தின்</u>** மாணப்பெரிது.

2. எழுமை **<u>எழுபிறப்பும்</u>** உள்ளுவர் தங்கண்

   விழுமந் துடைத்தவர் **<u>நட்பு.</u>**

3. ஒறுத்தாரை யொன்றாக வையாரே **<u>வைப்பர்</u>**

   பொறுத்தாரைப் **<u>பொன்போல்</u>** பொதிந்து.

4. உண்ணாது **<u>நோற்பார்</u>** பெரியர் பிறர்சொல்லும்

   **<u>இன்னாச்சொ</u>** னோற்பாரிற் பின்.

5. எப்பொருள் **<u>யார் யார்வாய்க்</u>** கேட்பினும் அப்பொருள்

   **<u>மெய்ப்பொருள்</u>** காண்ப தறிவு.

6. அஞ்சுவ தஞ்சாமை **<u>பேதைமை</u>** அஞ்சுவ

   தஞ்சல் அறிவார் **<u>தொழில்.</u>**

7. சொல்லுதல் யார்க்கும் எளிய **அரியவாம்**

   சொல்லிய **<u>வண்ணம்</u>** செயல்.

8. துன்பம் உறவரினும் **<u>செய்க</u>** துணிவாற்றி

   **<u>இன்பம்</u>** பயக்கும் வினை.

***************

# துணைப்பாடம்
# 1. பால் வண்ணம் பிள்ளை

-புதுமைப்பித்தன்

**கதை மாந்தர்கள்**

- பால் வண்ணம் பிள்ளை
- பிள்ளையின் மனைவி
- நான்கு குழந்தைகள்
- மேல வீட்டு அண்ணாச்சி
- சுப்புக் கோனார்

**முன்னுரை:-** குடும்பங்களை மையமாகக் கொண்டு சிறந்த சிறுகதைகளை உருவாக்கியவர் புதுமைப்பித்தன் ஆவார். இவரின் மிகச்சிறந்த கதையான "பால்வண்ணம் பிள்ளை" கதையினை இங்கு காண்போம்.

**கதைக் கரு:-** "ஆண்" என்பதற்காக ஆணவம் கொள்ளாதே.

**மெக்ஸிகோ எங்கே?:-**

பால்வண்ணம் பிள்ளை கலெக்டர் ஆபீஸில் 35 ரூபாய் சம்பளத்தில் குமாஸ்தாவாகப் பணியாற்றினார். ஒரு நாள் பால்வண்ணம் பிள்ளையோடு பணியாற்றும் குமாஸ்தா மெக்ஸிகோ வடஅமெரிக்காவில் இருப்பதாகக் கூறினார். பால்வண்ணம் பிள்ளையோ **மெக்ஸிகோ தென்அமெரிக்காவில் இருப்பதாகக் கூறினார்.**

தான் சொன்னது சரியே என்பதை நிரூபிக்க வீட்டில் உள்ள பூகோளப் புத்தகத்தைப் பார்க்க வேகமாக வீட்டிற்கு வந்தார்.

**மனைவி கூறிய ஆலோசனை:-**

பால்வண்ணம் பிள்ளைக்கு நான்கு குழந்தைகள். அவர்களின் பால்செலவிற்குக் கூடுதலாக நான்கு ரூபாய் செலவாகிறது. இந்தக் கூடுதல் செலவைப் போக்க குழந்தைகளுக்காக ஒரு மாடு வாங்கி விட்டால் என்ன என்று பால்வண்ணத்தின் மனைவி எண்ணினாள்.

**மாடு வாங்க வேண்டாம்:-**

வீட்டிற்கு வந்து பூகோளப் புத்தகத்தைப் பார்த்தார் பால்வண்ணம். அதில் மெக்ஸிகோ வடஅமெரிக்காவில் இருந்தது. அவர் மனதில் கோபம் வந்தது. அந்த நேரத்தில் பிள்ளைகளுக்காகப் பசுமாடு வாங்கும் ஆலோசனையை மனைவி கூறினாள். இதற்குப் பால்வண்ணம் "இங்கே வந்தால் ஓரே இராமாயணம்" என்று கோபத்தில் கூறியதோடு, "மாடுகீடு வாங்க முடியாது" என்றார். தன் பிள்ளைகள் நீத்தண்ணியைக் குடித்தே வளர்ந்துவிடும் என்றார்.

**பசுவையும், கன்றையும் மனைவி வாங்குதல்:-** மனைவி தன் கையில் அணிந்திருந்த இரண்டு கெட்டிக் காப்பு வளையல்களை விற்று, மேல வீட்டு அண்ணாச்சி உதவியோடு, ஒரு மயிலைப் பசுவையும், கன்றையும் வாங்கினாள். வீட்டிற்கு வந்த பால்வண்ணம்பிள்ளை வீட்டில் பசுவும், கன்றும் இருப்பதைப் பார்த்துக் கோபம் அடைந்தார். அவர் அன்றிலிருந்து வீட்டில் காப்பியும், மோரும் சாப்பிடுவதில்லை.

**பால்வண்ணத்தின் பிடிவாதச் செயல்:-**

15 நாட்களுக்குப் பிறகு ஒருநாள் இரவு 8 மணிக்குப் பால்வண்ணம்பிள்ளை மாட்டை விற்பதற்காகச் சுப்புக்கோனாரைக் கூட்டி வந்தார். மாட்டைப் பாரும் 25 ரூபாய். சாமி மாடு 60 ரூபாய் பெறும் என்று சுப்புக்கோனார் கூறியும் "உனக்காக 30 ரூபாய். இப்பொழுதே பிடித்துக் கொண்டு போக வேண்டும்" என்று கட்டளை இட்டார். 70 ரூபாய்க்கு வாங்கிய மாட்டினை 30 ரூபாய்க்குச் சுப்புக் கோனாரிடம் விற்றுவிட்டார். பால்வண்ணத்தின் மூத்த மகன் "அம்மா என் கண்ணுக்குட்டி" என்று அழுதான். 'சும்மா கெட சவமே' என்று பால்வண்ணம்பிள்ளை கூறினார்.

**முடிவுரை:-**

ஆணாதிக்கத்தோடு செயல்படுவதால் குடும்பம் எவ்வாறு துன்பப்படும் என்பதை இக்கதை உலகிற்குக் கூறுகிறது.

## 2. வேலி

-இராஜம் கிருஷ்ணன்

**கதை மாந்தர்கள்**

- கோமதி
- கோமதியின் மகன், குழந்தைகள்
- மருமகள் மாலதி
- கோமதியின் பெண்கள்: பங்கஜம், செண்பகம்
- மாலதியின் அக்கா : ருக்மணி
- ருக்மணியின் கணவன்: செல்லப்பன்

**முன்னுரை:-**

பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்டு கதைகள் எழுதுவதில் வல்லவர் இராஜம்கிருஷ்ணன் ஆவார். அவரது சிறந்த கதைகளுள் ஒன்றாகிய 'வேலி' என்னும் சிறுகதை பற்றிக் காண்போம்.

**கதைக் கரு:-** பணத்திற்கு வேலியும் இல்லை முள்ளும் இல்லை

**கல்யாணத்தில் தொடங்கியது:-**

கோமதியின் மூத்த மகன் அலுவலகத்தில் பணியாற்றும் 'மாலதி' என்னும் வேற்றுச் சாதிப் பெண்ணைக் காதலித்தான். மாலதி நல்ல அழகு; இனிமையாகப் பேசுபவள். காதலித்த இவர்கள் ஒருநாள் திருமணம் முடித்துக் கொண்டு, கோமதி வீட்டிற்குச் சென்றார்கள். சில மாதங்களுக்குப் பிறகு மாலதியின் கணவன் வேலையின் காரணமாக 6000 கல்களுக்கு அப்பால் உள்ள வெளிநாட்டிற்குப் பணியாற்றச் சென்று விட்டான். மாலதி கருவுற்று இருந்தாள்.

**வேலி தாண்ட முடியவில்லை:-**

மகன் ஆசைப்பட்டுத் திருமணம் முடித்தான் என்பதற்காக மாலதியைக் கோமதி மருமகளாக ஏற்றுக் கொண்டாள். ஆனால் அவனுக்குப் பின்னால் உள்ள பிள்ளைகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்ய வேண்டாமா? வேலி தாண்ட முடியவில்லை என்று கோமதி

மனம் வருந்தினாள். "ஏதோ உத்தியோகம் என்கிற சாக்கில் வெளியே போகட்டும், வரட்டும், இருக்கட்டும்னு" கோமதி மருமகளை மனதில் ஏற்றுக் கொண்டாள். ஆனால் மாலதியின் அம்மா, அப்பாவை சம்பந்தி முறை கொண்டு உறவாட அவள் விரும்பவில்லை.

**உண்மை அறிந்த செண்பகம்:-**

கோமதியின் மகள் செண்பகம் 'மாலதி அண்ணி தொட்டு சமைத்த உணவை அம்மா உண்ணமாட்டாள்' என்னும் உண்மை அறிந்தவள். அண்ணி தங்களுக்குச் சமமானவள் இல்லை என்பது கோமதி பிள்ளைகளுக்குத் தெரியும்.

**சிறைப்பட்ட கிளியாக மாலதி:-**

எட்டுமணி நேரம் அலுவலகத்தில் இயந்திரமாக மாலதி வாழ்ந்தாள். அவளைத் தாய்வீட்டிற்கு கோமதி அனுப்புவதே இல்லை. மாலதிக்குக் கோமதி முழுமையான ஆதரவும் கொடுப்பதில்லை. இதை நினைத்து அழக்கூட முடியாதவளாக மாலதி வாழ்ந்தாள்.

**வளைகாப்பை நடத்துங்கள்:-**

திடீரென்று ஒருநாள் மாலதியின் அக்காள் ருக்குமணியும், அத்தான் செல்லப்பனும் கோமதி வீட்டிற்கு வந்தார்கள். அவர்களைக் கண்டதும் வந்த வெறுப்பை கோமதி விழுங்கி விட்டு, சிரிப்பை வெளிக் காட்டினாள். வளைகாப்பை நடத்துவதற்காக அம்மா உடலை வருத்திச் சேர்த்த இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை அம்மா தந்ததாக ருக்மணி கோமதியிடம் கொடுத்தாள். கோமதி அதனை மடித்து இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

**தொடாத மாமியார்:-**

ஒரு நாள் மாலை உடல்நலம் இல்லாதவள் போல் மாலதி படுத்திருந்தாள். தன்னை அப்போதாவது தொட்டுப் பார்ப்பார்களா ? என்பதை அறிவதற்காக அவ்வாறு இருந்தாள். "உடம்புக்கு என்ன ?" என்று கேட்டுக் கொண்டு வந்த கோமதி தொட்டுப் பார்க்கவில்லை. "செம்பகம் இங்க வந்து அண்ணியைத் தொட்டுப்பாரு" என்று கோமதி சொன்னதும் மாலதிக்குக் கசப்பை அதிகமாக்கியது.

**சம்பளத்தைத் தேடி வந்தாள்:-**

மாலதியின் அக்காவும், அத்தானும் வந்து சென்றபின் மயக்கம் வருவது போல் இருந்ததால், மாலதி படுக்கையில் படுத்திருந்தாள். அங்கு வந்த கோமதி, உங்க அக்காவுக்கும், அத்தானுக்கும் காப்பிக்காக இரண்டு கப்புக்குப் பால் எடுத்ததால் நாளைக்கு மோருக்குக் கூடப் பால் இல்லை என்றாள். சம்பளம் போடவில்லையா ? தேதி ஐந்தாகி விட்டதே ? என்று கோமதி மாலதியிடம் கேட்டாள். அவள் பெட்டியில் இருக்கிறது என்றவுடன், நானே எடுக்கிறேன் என்று சொல்லி கோமதி மாலதியின் பெட்டியைத் திறந்து சேலைகளுக்கு அடியில் இருந்த பர்ஸை எடுத்துக் கொண்டாள். இதைப் பார்த்த மாலதி 'பணத்திற்கு ஒன்றுமே இல்லை, வேலியும் இல்லை; முள்ளும் இல்லை' என்று மனதில் எண்ணினாள்.

**முடிவுரை:-**

பெண்கள் வேலைக்குச் சென்று, சம்பாதித்தால் சமுதாயத்தில் விடிவு வரும் என்று நினைத்த பெண்ணினம் இன்னும் சமுதாய வேலிகளுக்குள் சிக்கி இருப்பதை இக்கதை உணர்த்துகிறது.

# 3. மண்

-அய்க்கண்

**கதை மாந்தர்கள்**

- கருப்பையா - இராமாயி- தமிழ்த்தம்பதி
- சூரப்பட்டி மக்கள்
- சேவா தொண்டு நிறுவனர் - கோவிராஜ்
- சின்னத்தாய்
- ரிச்சர்டு - லிஸி- ஆங்கிலேயத்தம்பதி

**முன்னுரை:-**

கதாசிரியர் அய்க்கண் பண்பாட்டு உணர்வுகளை மையமாக வைத்துக் கதைகள் எழுதுவதில் சிறந்தவர். அவர் எழுதிய புகழ்பெற்ற கதைகளுள் ஒன்றான மண்' சிறுகதையில் என் உள்ளம் கவர்ந்த 'இராமாயி' பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கதைச்சுருக்கம்:-**

இராமாயி - கருப்பையா தம்பதியினர் விவசாயக் கூலிகளாகச் சூரப்பட்டியில் வாழ்ந்தார்கள். பெண் குழந்தைகளைக் கொல்வதைப் பாவம் எனக் கருதாத, படிப்பறிவு இல்லாத கிராமம் அது. அக்கிராமத்தில் இராமாயி மூன்றாவது பெண் குழந்தையாகச் சின்னத்தாயைப் பெற்றாள். வறுமையால் இங்கிலாந்தில் வாழ்ந்த வெள்ளைக்காரர்களான ரிச்சர்டு - லிஸி தம்பதியினருக்குச் சின்னத்தாயைத் தத்துக் கொடுத்தாள். 21 ஆண்டுகளுக்குப் பிறகு சின்னத்தாயி தன்னைப் பெற்ற பெற்றோரைப் பார்க்க சூரப்பட்டிக்கு வந்தாள். இராமாயி அவர்களை வரவேற்று, அவர்களுக்கு விருந்து பரிமாறினாள். இராமாயி குடும்பத்தின் வறுமையை எண்ணிய ரிச்சர்டு - லிஸி தம்பதியினர் இரண்டு இலட்சம் ரூபாயைக் கோவிராஜ் மூலமாகக் கொடுத்தனர். “எங்களின் குழந்தைச் செல்வத்தை நாங்கள் தானமாகத்தான் கொடுத்தோம்” என்று சொல்லி, பணத்தை இராமாயி குடும்பத்தினர் வாங்க மறுத்தனர். ரிச்சர்டும், லிஸியும் இந்தியப் பண்பாட்டைப் போற்றினர்.

**பெண்பிள்ளைகளை அன்பு செய்பவள்:-**

இராமாயி மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றவள். அந்தக் கிராமத்தில் பெண் குழந்தை பிறந்த வீடு இழவு வீடு போல இருக்கும். கள்ளிப்பால், கருக்காய், நெல் என்று ஏதாவது கொடுத்துத் தாய்மார்களே கொன்று, புதைத்து விடுவார்கள். அத்தகைய கிராமத்தில் மூன்றாவதாகப் பிறந்த சின்னத்தாயியையும் சேர்த்து மூன்று பெண்பிள்ளைகளையும் இராமாயி அன்பு செய்தாள். ஊராரிடமிருந்து அவர்களைக் காப்பாற்றினாள். இவை எல்லாம் இராமாயி பெண்பிள்ளைகளை மிகவும் அன்பு செய்பவள் என்பதைக் காட்டுகின்றன.

**உழைப்புதான் அவளின் தெய்வம்:-**

நாற்றுப்பாவுதல், நடவு, களைஎடுப்பு, அறுவடை என்று ஒரு வருடத்தில் மூன்று மாதங்கள்தான் இராமாயிக்கு வேளாண்மை வேலை கிடைக்கும்.அவ்வப்போது கிடைக்கும் மெய்க்காட்டு வேலைகளையும் தன்கணவருடன் கிராமம், கிராமமாகச் சென்று பார்த்து வந்தாள். இச்செயல்கள் அவள் உழைப்பையே தெய்வமாகப் போற்றுபவள் என்பதை உணர்த்துகின்றன.

**ஊரையே எதிர்க்கத் துணிந்தவள்:-**

இராமாயிக்கு வறுமை காரணமாகச் சின்னத்தாயை வளர்க்க முடியவில்லை. அவள் எப்படியாவது வாழவேண்டும் என்று இராமாயி துடிக்கிறாள் அதற்கு வாய்ப்பாக ரிச்சர்டு - லிஸி தம்பதியினர் குழந்தையைத் தத்துக் கேட்கும் போது ஊரார் தத்துக்கொடுக்கக் கூடாது என்கிறார்கள். "புதுப்பழக்கத்தை உண்டாக்கினால் பெரியவர்கள் ஊரைவிட்டே தள்ளி வைத்து விடுவார்கள்" என்று ஊர்மக்கள் மிரட்டுகிறார்கள். ஊராரையே எதிர்த்துத்தான் சின்னத்தாயியை இராமாயி கோவிராஜ் மூலமாகத் தத்துக் கொடுக்கிறாள். இது பெண் பிள்ளைகளைக் காப்பாற்ற ஊரையே எதிர்க்கும் இராமாயியின் மனவலிமையை எடுத்துக் காட்டுகிறது.

**இராமாயியின் விருந்தும், அன்பும்:-**

21 வருடங்களுக்குப் பிறகு இராமாயி பெற்ற சின்னத்தாயி அவளைத் தத்தெடுத்த பெற்றோருடன் வருவதால் தன் வறுமை வாழ்விலும் அன்றைக்கு அரிசிச்சோறு, குழம்பு, காய்கறிகள், ரசம், பாயாசம் வைத்து விருந்து பரிமாறுகிறாள். தன் மகளுக்கு அன்போடு உணவு ஊட்டி மகிழ்கிறாள். இவை அனைத்தும் இராமாயியின் விருந்தோம்பல் பண்பை எடுத்துக் காட்டுகின்றன.

**பயனை எதிர்ப்பார்க்காத இராமாயி:-**

இராமாயி குடும்பத்தின் வறுமையைப் போக்க ரிச்சர்டு– லிஸி தம்பதியர் இரண்டு இலட்சம் ரூபாய் அன்பால் கொடுத்ததை இராமாயி ஏற்க மறுத்தாள். "எங்களிடம் குழந்தைச் செல்வம் இருந்ததால் தானம் கொடுத்தோம். விலைக்குக் கொடுக்கவில்லை" என்று உரிய காரணமும் கூறி, மறுக்கிறாள். இச்செயல் அவள் பயனை எதிர்பார்க்காத பண்புடையவள் என்பதைக் காட்டுகிறது.

**முடிவுரை:-**

இத்தகைய சிறந்த பண்புகள் அனைத்தையும் அறிந்த பின்பே "அந்த மண்ணில்தான் திருக்குறளும், திருவாசகமும், சின்னத்தாயும் பிறக்க முடியும்" என்று ரிச்சர்டு பாராட்டுகிறார். வெள்ளைக்காரத்தம்பதிகள் பாராட்டும் இராமாயியின் பண்புகள் அனைத்தும் இந்தியப் பண்பாட்டை உலகில் உயர்த்துகின்றன.

# இலக்கிய நயம் பாராட்டல்

| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை (ஆசிரியர் குறிப்பு) | பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. |
| 2. | **மோனை** | சீர்தோறும் அல்லது அடி தோறும் **முதல் எழுத்து** ஒன்றி வருவது மோனை ஆகும். |
| 3. | **எதுகை** | சீர்தோறும் அல்லது அடி தோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றி வருவது எதுகை ஆகும். |
| 4. | **முரண்** | சீர் தோறும் அல்லது அடி தோறும் சொல்லோ அதன் பொருளோ முரண் பட (**எதிர்ச்சொல்லாய்**) வருவது முரண் ஆகும். |
| 5. | **இயைபு** | சீர் தோறும் அல்லது அடி தோறும் **கடைசியில் நின்ற எழுத்தோ, சொல்லோ** ஒன்றி வருவது இயைபு ஆகும். |
| 6. | **அணி** | இயல்பு நவிற்சி அணி, உயர்வு நவிற்சி அணி, உவமை அணி, சொற்பொருள் பின்வருநிலையணி ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்று இடம் பெறும். |
| 7. | **சுவை நயம்** | பெருமிதச் சுவை |
| 8. | **தலைப்பு** | இரண்டு , மூன்று சொற்களுக்குள் எழுதுக |
| 9. | **முடிவுரை** | |

## முன்னுரைக்கான ஆசிரியர் குறிப்புகள்:

**பாரதியார்:**

பாரதியார் 1882ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 11ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். பெற்றோர் சின்னச்சாமி ஐயர், இலக்குமி அம்மாள் ஆவர். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றதால் பாரதி என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இவர் கண்ணன் பாட்டு,குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் முப்பெரும் பாடல்களைப் பாடியுள்ளார். 11-09-1921இல் இயற்கை எய்தினார்.

**பாரதிதாசன்**

பாரதிதாசனார் 29-04-1891 இல் புதுவையில் பிறந்தார். இவர் பெற்றோர் கனகசபை, இலக்குமி அம்மாள். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம். பாரதியார் மீது கொண்ட அன்பு காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் எனப் புனைந்துகொண்டார். இவர் குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, பாண்டியன் பரிசு, பிசிராந்தையார் நூல்களை இயற்றியுள்ளார். 21-04-1964 அன்று இயற்கை எய்தினார்.

**நாமக்கல் கவிஞர்**

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் நாமக்கல் மாவட்டம் மோகனூரில் 19-10-1888 ஆம் ஆண்டு வெங்கட்ராமன் என்பாருக்கும் அம்மணி அம்மாளுக்கும் 8 ஆவது மகனாகத் தோன்றினார். சிறந்த விடுதலைப் போராட்ட வீரருமாவார். இவரைச் சிறப்பிக்கும் பொருட்டு, தமிழக அரசு அரசவைக் கவிஞராகவும், சட்ட மேலவை உறுப்பினராகவும் நியமித்தது. நடுவண் அரசு இவருக்கு, "பத்மபூஷண்' விருது அளித்துச் சிறப்பித்தது. இவர் இயற்றிய நூல்களுள் சில மலைக்கள்ளன், சங்கொலி, அவனும் அவளும். இவர் 24-08-1972 அன்று இயற்கை எய்தினார்.

**கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தேரூரில் சிவதாணுப்பிள்ளை - ஆதிலட்சுமி ஆகியோருக்கு 27-07-1876 இல் மகனாகப் பிறந்தார்.இவர் இயற்றிய நூல்கள் ஆசிய ஜோதி, மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், உமர்கய்யாம் பாடல்கள் முதலியனவாகும். 24-08-1972 அன்று இயற்கை எய்தினார்.

# உரைநடை

## பெருவினா

## பாடம் : 1 உயர்தனிச்செம்மொழி

**1. செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு என்ற பிரிவுகள் பற்றிப் பரிதிமாற்கலைஞர் உரைப்பன யாவை?**

**செந்தமிழ் நாடு:**

1. சந்தன மரங்கள் நிறைந்த பொதிகை மலையில் இருந்து தமிழ் வளர்த்த அகத்திய முனிவரும்,
2. சௌந்தர பாண்டியன் என்னும் தமிழ் மன்னரும்
3. சங்கப் புலவர்களும் தழைத்து இனிதே வாழ்ந்த மங்கலத் தன்மை உடைய பாண்டிய வளநாடு தான் செந்தமிழ்நாடு என்று அழைக்கப்பட்டது.

**கொடுந்தமிழ் நாடு**

1. தென்பாண்டிநாடு
2. குட்ட நாடு
3. குட நாடு
4. கற்காநாடு
5. வேணாடு
6. பூழிநாடு
7. பன்றி நாடு
8. அருவா நாடு
9. அருவா வடதலை நாடு
10. சீத நாடு
11. மலையமான் நாடு

12. புனல் நாடுசெந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த இந்தப் பன்னிரண்டு குறுநிலங்களும் குற்றமில்லாக் கொடுந்தமிழ் நாடாகும்.

**2. இசைத்தமிழ் என்பது யாது? முற்காலத்தும் இக்காலத்தும் விளங்கும் இசைத் தமிழ் நூல் வகைகள் யாவை?**

**இசைத்தமிழ்:**

1. இசைத்தமிழ் என்பது பண்ணொடு கலந்தும் தாளத்தோடு சேர்ந்தும் அமையும் செய்யுளாகும்.
2. செந்தமிழ்ப் பாட்டுகளாலும், கொடுந்தமிழ்ப் பாட்டுகளாலும் அமைந்த இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமான நூல்களின் தொகுதியாகும்.

**இசைத்தமிழில் அடங்குவன**

1. கீர்த்தனைகள்
2. வரிப்பாடல்கள்
3. சிந்து
4. ஆனந்தக் களிப்பு
5. கும்மி
6. தெம்மாங்கு

**முற்காலத்து இசைத்தமிழ் நூல்கள்**

1. பெருநாரை
2. பெருங்குருகு
3. இசை நுணுக்கம்
4. தாளவகை யோத்து

**இடைக்காலத்து இசைத்தமிழ் நூல்**

தேவாரம்

**இக்காலத்து இசைத்தமிழ் நூல்கள்**

1. கந்தபுராணக் கீர்த்தனை 3. சங்கீத சந்திரிகை 2. பெரியபுராணக் கீர்த்தனை

**3. நாடகத் தமிழின் சிறப்பியல்புகளாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?**

**நாடகத்தமிழ்:**

1. கையில் புத்தகத்தை எடுத்துப்படிக்க நேரம் இல்லாத பணியாளர்களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்துடன் எழுந்ததே நாடகத் தமிழாகும்.
1. அது கேட்போருக்கும் காண்போர்க்கும் இன்பம் தருவதால் மக்கள் அதனைக் காண விரும்பிச் செல்கின்றனர்.

**நாடகத் தமிழின் சிறப்பு:**

இயல் தமிழ், இசைத் தமிழ் ஆகிய இரண்டையும் அடிப்படையாக் கொண்டு பிறந்ததே நாடகத்தமிழ்.

1. இயலும், இசையும் கேள்வி இன்பம் மட்டுமே தருவன
2. நாடகத் தமிழோ கேள்வி இன்பத்துடன் காட்சி இன்பமும் தருகிறது.
3. இதனால் தான் பிற நாட்டவரும், பிறமொழிப் புலவர்களும் நாடகத்தை மேன்மை
4. உடையதாக மதிக்கின்றனர்.

**4. தமிழ் உயர்மொழி, தனி மொழி என உரைக்கப்படக் காரணங்கள் யாவை?**

**தமிழ் உயர் தனிச் செம்மொழி:**

1. வடமொழி, இலத்தீன், கீரிக் முதலிய மொழிகளைப்போன்று தமிழ் மொழியும் உயர் தனிச் செம்மொழியாகும்.

**உயர்மொழி - விளக்கம்:**

1. தான் வழங்கும் நாட்டில் உள்ள மொழிகள் எல்லாவற்றையும் விட உயர்வான, மேன்மை உடைய மொழியே உயர்மொழி ஆகும்.
2. தமிழ் மொழி தெலுங்கு முதலியவற்றிற்கு எல்லாம் தலைமை சான்றது, அவற்றினும்
3. மிக்க மேதகவும் உடையது. எனவே தமிழ் உயர்மொழியே ஆகும்.

**தனி மொழி - விளக்கம்:**

1. தனித்து இயங்கும் ஆற்றல் உடைய மொழியே தனிமொழி ஆகும்.
2. தமிழ்மொழியின் உதவியை நீக்கினால் தெலுங்கு முதலிய மொழிகள் இயங்கா. ஆனால் தமிழ் மொழி பிறமொழிகளின் உதவியின்றி தனித்து இயங்கக்கூடியது.
3. இஃது இந்திய மொழி நூற் புலவர்களும் ஏற்றுக்கொண்ட உண்மை ஆகும். ஆகவே தமிழ்மொழி தனி மொழியே ஆகும்.

**5. செம்மொழியின் இலக்கணம் யாது? அவ்விலக்கணம் தமிழ் மொழியின்பால் பொருந்தியிருப்பதனை நிறுவுக?**

1. திருந்திய பண்பும் சீர்த்த நாகரீகமும் பொருந்திய மொழியே செம்மொழி ஆகும். இவ்விலக்கணம் தமிழ் மொழியில் அமைந்திருத்தல் தேற்றம்.
2. இடர்பட்ட சொல் முடிவுகளும் பொருள் முடிவுகளும் இல்லாமல் சொல்பவன் கருதிய பொருளைக் கேட்பவன் தெளிவாய் உணரவல்லதாய்ப் பழையன கழிந்தும் புதியன புகுந்தும் திருத்தம் எய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவதாகும். இது தமிழ் மொழியில் அமைந்திருக்கிறது.
3. ஒரு நாட்டின் முதிர்ச்சிக்கு ஏற்றவாறு சொற்களும் தோன்றி மொழிகளும் நாகரீக நலம் விளைத்தல் வேண்டும்.
4. சொற்கள் தோன்றும் போது, பிற மொழிச்சொற்கள் அல்லாமல் தன் சொற்களே மிகுதல் வேண்டும். இது தமிழ் மொழிக்குப் பொருந்தும்.

## பாடம் : 2 சமரசம்

**1. உலகில் சமரசம் பரவாமைக்குக் காரணங்களாகத் திரு.வி.க கூறுவன யாவை?**

1. சமரசத்தைப் பற்றி எழுந்த பேச்சுகளும் எழுத்துகளும் மலையெனவும், கடலெனவும் உள்ளன.
2. உலகில் தோன்றிய அறிஞர் பலரும் சமரசத்தையே அறிவுறுத்திச்சென்றனர். ஆனால், உலகம் அதற்குச் செவி சாய்க்கவில்லை.
3. மனிதனிடத்தில் குடி கொண்டுள்ள அழுக்காறு அவா, வெகுளி முதலியன மனிதனை சமரச ஞானியாக்குவதில்லை.
4. சமரசத்தைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் எளிது ஆனால் அதனை நடைமுறைக்குக் கொண்டு வருவது அரிது.
5. எனவே, மனிதன் சமரசத்தைப் பற்றிப் பேசுவதைக்காட்டிலும் அதை நடைமுறையில் கொண்டுவர முயலுவதே அறிவுடைமையாகும்.

**2. நாடு எனும் பற்றால் சமரசத்தை இழப்பது பற்றித் திரு.வி.க. உரைப்பன யாவை?**

1. ஒருவன் நாடு எனும் பற்றால் பிற நாடுகளைத் துன்புறுத்துதல் கூடாது.
2. மேல் நாட்டார் தாம் பிறந்த நாட்டின் பொருட்டு பிற நாடுகளைப் பற்றுவதில் திறமை வாய்ந்தவர்.
3. ஆகாய விமானங்களும், நீர் மூழ்கிக் கலங்களும் நச்சுக் காற்றுகளும் பிற நாடுகளைக் கைபற்றுவதற்கே கண்டனர்.
4. தங்கள் நாட்டையே கடவுளாகக் கருதும் இவர்களுக்குப் பிற நாட்டவரிடமும் கடவுள் இருத்தல் புலனாவது இல்லை.
5. மற்றவர்க்கும் பசி முதலியன உண்டு என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.
6. எல்லா நாட்டவர்களும் சகோதரர்கள் என்பதை உணராத இவர்கள் நாடு எனும் பற்றால் சமரசத்தை இழக்கிறார்கள்.

**3. சாதிக் கொடுமை, சமயவெறி முதலியன சமரச உணர்வைக் குலைப்பனவாம் - இக்கருத்தைத் திரு.வி.க. வழி நின்று ஆய்க:**

**சாதிக் கொடுமை**

1. பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதும் பெருங்குற்றம் நமது நாட்டுக்கே சிறப்பாக உண்டு.
2. எல்லாக் கொடுமைகளிலும் தலையாயது சாதிக் கொடுமையே.
3. பிறப்பால் உயர்வு, தாழ்வு கருதும் உள்ளத்தில் சமரசச் சாயல் படராது.

**சமய வெறி**

1. சமய வெறி கடவுள் அன்பைக் கெடுக்கிறது.
2. ஒருவன் தன் சமயத்தின் மீது பற்றுக்கொண்டு மற்ற சமயத்தாரை நிந்திக்கிறான்.
3. சமயம் என்பது ஒன்றே. அதுவே சமரசம் ஆகும்.
4. பல சமய உணர்வும் தன் சமயப் பற்றும் சமரசத்தை அழித்துவிடுகின்றன.

**4. நம் நாட்டில் நீண்ட காலமாக நிகழ்ந்து வரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுது.**

1. பெரியோர் அறிவுறுத்திய கொள்கைகளைப்புதைத்து அவர் உருவத்தை மட்டும் வந்தனையும், வழிபாடும் செய்யும் பொய் ஒழுக்கம் நம் நாட்டில் நீண்ட நாள் வழக்கிலிருக்கிறது.
2. "சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்" என்றும், "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்", என்றும் அருளிய பெரியோரை வழிபடும் மக்கள், சாதியையே கடவுளாகவும் சமயமாகவும் கொண்டுள்ளனர்.
3. இவர்கள் சாதியை மறுத்துச் சமரசத்தில் திளைத்த பெரியோரை வழிபடுவதில் பொருள் இல்லை.பெரியோர் அறிவுறுத்திய நெறிநின்று ஒழுகுவதே உண்மையான வழிபாடாகும்.

## பாடம் : 5 ஆவுந்தமிழரும்

**1.மக்கள் நாகரிகத்தோடு மாட்டிற்கும் தொடர்புண்டு என்பதைப்பாவாணர் கூறுமாறு யாங்ஙனம்?**

1. மக்கள் நாகரிகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நகரம் என்ற நான்கு நிலைகளைத்தழுவியது. அவற்றுள் குறிஞ்சியிலேயே தமிழர்க்கு, அத்தமிழரின் முன்னோர்க்கு ஆத்தொடர்பு இருந்திருத்தல் வேண்டும்.
2. ஆவானது முதன் முதலில் குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்காகும். குறிஞ்சியை அடுத்த முல்லை நிலத்தில் வாழ்ந்த ஆயர் ஆட்டையும் மாட்டையும் பெரிய அளவில் வளர்த்தனர். அவற்றின் ஊனையும், பாலையும் உண்டு வாழ்ந்தனர். அவை மேய்ப்பவர் ஆயர் எனப் பெயர் பெற்றனர்.

**2. மாடு என்பது செல்வம் போலக் கருதப்படக் காரணங்கள் யாவை?**

1. பண்டைய உலகம் முழுமையும் மாடே மக்களின் செல்வமாக இருந்தது.
2. "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" என்று வள்ளுவர் கூறுவதிலிருந்து, மாடே செல்வம் என்பதை உணரலாம்.
3. முல்லை நிலத்தில் உழவு தோன்றி, மருத நிலத்தில் சிறப்படைந்தது.
4. மாடு இரு நிலத்தாருக்கும் ஊனும், பாலும் கொடுத்து வேளாண்மைக்கும் உதவியது.
5. மாட்டின் ஊனும் பாலும் மட்டுமின்றி தோல்,கொம்பு உரசனை, வால், மயிர், சாணம் முதலிய பிறவும் பயன்பட்டன.
6. பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியன ஐந்தும் ( பஞ்சாமிர்தம் ) தருவது மாடே ஆகும்.

**3. ஆவின் சிறப்புகளாகப் பாவாணர் விதந்துரைப்பன யாவை?**

1. ஆவும், ஆவேறும் மக்களுக்குப் பயன்படுவன. அவற்றுள் ஆவே அமைதியுடையதும், அமுதளித்தலும், இருபால் கன்று ஈனுதலும் பற்றிச் சிறப்பாய்ப் போற்றப்பட்டது.
2. "பார்த்தால் பசுபோல. பாய்ந்தால் புலி போல" என்பது பழமொழி. ஆவுக்கு வாயுறை அளித்தல் முப்பத்திரண்டு அறக்கொடைகளுள் ஒன்றாய்க்கொண்டனர். இழக்கும் பொருளும் ஆவின் வாய்ப்பட்டால் ஆக்கமாம் என்னும் கருத்தில் "பாழாய்ப்போகிறது பசுவின் வாயிலே" என்னும் பழமொழி தோன்றியது.

3. ஆ, தான் உண்டதை மீண்டும் தன் வாய்க்குக் கொண்டு வந்து அசையிட்டுச் செரிக்கச் செய்யும்.அதனால் ஆவானது தலை மாணாக்கருக்கு உவமையாய்க் கூறப்பட்டது.
4. ஆவின் தினவு தீர்த்தற்பொருட்டு, ஆவுரிஞ்சி என்றும் ஆதீண்டு குற்றியென்றும் சொல்லப்பட்ட தறிகள் ஊர்தோறும் நாட்டப்பட்டிருத்தலைக் காணலாம்.

**4. அறுமுறை வாழ்த்து -விளக்கு.**

1. மக்களால் வாழ்த்தப்படும் பொருள்களுள் ஆவும் ஒன்றெனத் தமிழர் கருதினர். அறுமுறை வாழ்த்து என்னும் தொல்காப்பியப் பகுதியுரையில் "முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும் முடியுடை வேந்தரும், உலகும்" என்னும் அறுவரை வாழ்த்தல் என நச்சினார்க்கினியர் உரைத்தார்.
2. மக்கள் நல்வாழ்விற்கு ஆவும் ஒரு காரணம் என்பதை உணர்த்தே தமிழர் வாழ்த்தினார்.
3. "வாழ்க அந்தணர், வானவர் ஆனினம்" என்பது திருஞான சம்பந்தரின் அருள் உரையாகும்.

**5. 'ஆ' தெய்வத்தன்மை உடையது என்பதனை எடுத்துக்காட்டுக.**

1. ஆ, அஃறிணை உயிர்தான், ஆயினும் உயர்திணை உயிராகிய மனிதனை விடவும் தெய்வத் தன்மை உடையதாக, தூய்மை உடையதாகக் கருதப்பட்டது.
2. ஒரு நாட்டிலுள்ள ஆநிரை கள்வராலோ, பகைவராலோ கவரப்பட்டால் அது தூய்மைக்கேடாகவும் பேரிழப்பாகவும் கருதப்பட்டது. அதுவே கடும் போருக்குக் காரணமானது.
3. நல்லாட்சி நடத்தும் மன்னன் கூட வேற்று நாட்டைக் கைப்பற்ற விரும்பினால் அந்நாட்டு ஆநிரையைத் தன் வீரர்கள் மூலம் கவர்ந்து வரச்செய்து பாதுகாத்தான்.
4. ஆன்மடி அறுத்தல் மாபெருங்குற்றமாகக் கருதப்பட்டது. ஆக் கொலையோ அதைவிடப் பெருங்குற்றம் என்று கருதப்பட்டது.

## பாடம் :7. மனிதர் வாழ்க

**1. முன்னேற்றம் என்பது பற்றி மு.வ. உரைப்பன யாவை?**

1. உலகம் படிப்படியாய் முறையே முன்னேறி வருகிறது. உலகம் முன்னேறுகிறது என்றால் மலையும், காடும் ஏதோ மாறுதல் அடைகின்றன என்பதன்று. மக்களின் வாழ்வில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன என்பதாகும்.
2. இந்த முன்னேற்றத்திற்கு இடையிடையே பல நிலைகளில் மனிதர் தடுமாறியதுண்டு. தடுமாறித் தடுமாறிப் புதிய புதிய அறிவும் ஊக்கமும் பெற்று மனிதர் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். அந்த முன்னேற்றந்தான் நமக்கெல்லாம் நம்பிக்கையும், உறுதியும் அளித்து வருகிறது.

**2. முதல் தடுமாற்றம் என்று மு.வ. குறிப்பிடுவது யாது?**

1. பள்ளிக் கூடத்துச் சிறுவன், எழுத்துக் கல்வி பெருமை உடையது என்று உணராமல் பலகையும், பலப்பமும் உயர்ந்தவை என்று மயங்கக்கூடாது. அவ்வாறு மயங்கினால் அதை அவனுடைய வாழ்வில் நேர்ந்த ஒரு தடுமாற்றம் என்றே கூற வேண்டும்.
2. மக்கள் கூடி வாழத் தொடங்கிய போது வழிகாட்டிய தலைவன் தலையில் முடி சூட்டினர் கையில் கோலும் கொடுத்தனர்.
3. சில தலைமுறைகள் கடந்த பிறகு அந்த முடியும் கோலும் உடையவன் மன்னன் எனப்பட்டான். பின்னர், முடியும் கோலும் உடையவன் எவனாயினும் அவனைத் தெய்வமாய்ப் போற்றி அடிபணிய வேண்டும் என்ற மூடநம்பிக்கை எழுந்தது. இதுவே முதல் தடுமாற்றம் என்று மு.வ. குறிப்பிடுகிறார்.

3. **தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உணரப்பனவற்றை விளக்குக.**

1. நாட்டை ஆள்வதற்குத் தகுதி உடையரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் முறை தோன்றியது. கையை உயர்த்துவதன் மூலமாகவும், குடவோலை முறையிலும் நடைபெற்ற தேர்தல் முறை நம்நாட்டிலும் இருந்தது.
2. அந்தத் தேர்தல்களில் முடியும் கோலும் பெற்றிருந்த சிறப்பைச் செல்வமும் செல்வாக்கும் பெற்று விட்டன. செல்வந்தர்களும், செல்வாக்குப் படைத்தவர்களும் வெற்றி பெற்றுத் தலைவர் ஆயினர்.

3 பிறகு செல்வமும் செல்வாக்கும் மக்களுக்குப் பயன்படுவது மாறி, நாட்டு மக்கள் எல்லாரும் சிலருடைய செல்வத்தையும் செல்வாக்கையும் காப்பதற்காகப் பயன்பட்டனர். எனவே தேர்தலும் ஒரு தடுமாற்றமே என்று மு.வ. உரைக்கிறார்.

4. **ஒருபடி முன்னேற்றம் என்று மு.வ. உரைப்பது யாது?**

1. முடியும், கோலும் சிறப்பாய் இருந்த காலத்தில் அவற்றைக் காப்பதற்காகப் படைகளும், படைக்கருவிகளும் பயன்பட்டன.
2. இன்றைய ஆட்சி முறையிலும் படைகளும், படைக்கருவிகளும் அவ்வாறே பயன்படுகின்றன.
3. எனினும் அவற்றின் மதிப்பும், சிறப்பும் குறைந்து வருகின்றன. இது ஒரு படி முன்னேற்றம்.
4. இன்றைய மக்கள் செய்தி இதழ்களில் எழுதப்படுவனவும், மேடைகளில் பேசப்படுவனவும் உண்மையல்ல என்னும் தெளிவு பெற வேண்டும்.
5. அந்தத்தெளிவினால் போர்படைகளைக் கண்டு மயங்காததைப் போன்றே கட்சித் தேர்தல்களையும் கண்டு மயங்கமாட்டார்கள். இதுவும் ஒரு படி முன்னேற்றமே ஆகும்.

5. **ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயம் அமைய மு.வ. காட்டும் வழிகள் யாவை?**

1. முடி, கோல், கட்சி, தேர்தல் முதலியன மனித வாழ்வுக்கு உதவ வந்த கருவிகள், அந்தக் கருவிகள் பயனற்றுப்போனாலும், இடையூறாய்த் தோன்றுமானாலும், அவற்றைப் புறக்கணிக்க மனிதர்களுக்கு உரிமை உண்டு.

2. மேற்கூறியவை அனைத்தும் சிறியவை,; மனித வாழ்வே பெரியது. மனித வாழ்வுக்கு அடிப்படையானவை இரண்டு. அவை கூட்டுறவும், உழைப்புமாகும். அவை உள்ளவரை மனித வாழ்வுக்குக் குறைவு இல்லை.
3. கூட்டுறவுக்கு வரும் இடையூற்றை வெல்ல அறப்படையும், உழைப்புக்குப் பஞ்சம் வந்தால் அதை வெல்ல உழுநிலமும் வேண்டும். சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும் இல்லாத சாதி, சமயம், கட்சி முதலியவற்றால் ஏற்றத் தாழ்வு இல்லாத சமுதாயம அமைய இதுவே வழியாகும்.

**நெடுவினாக்கள்**

## பாடம் :1 உயர்தனிச்செம்மொழி

**1. இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.**

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என மூவகைப்படும். ஆம்மூவகைப்பாகுபாடு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**இயற்றமிழ்**

1. உரைநடை, செய்யுள், இலக்கிய இலக்கணங்களும் அடங்கும்.
2. செந்தமிழ், கொடுந்தமிழ்ச் செய்யுள் நூல்கள். செந்தமிழ் கொடுந்தமிழ் உரைநடை நூல்கள் முதலியன இயற்றமிழில் அடங்கும்.

**இசைத்தமிழ் :** உரை நடை பாடம் ஒன்றில் பெருவினா 2 க்குரிய விடை
**நாடகத் தமிழ் :** உரை நடை பாடம் ஒன்றில் பெருவினா 3 க்குரிய விடை

**2. தமிழ் - உயர்தனிச் செம்மொழி - இத்தலைப்பின் கீழ் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**தமிழ் உயர் மொழி, தனி மொழி :**
உரை நடை பாடம் ஒன்றில் பெருவினா 4 க்குரிய விடை
**தமிழ் செம்மொழி :**
உரை நடை பாடம் ஒன்றில் பெருவினா 5 க்குரிய விடை

## பாடம் : 2 சமரசம்

**1. நாடு, சமயம், சாதி இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமரச உணர்வினின்று மாறுபடுதல் தவறாம் என்று திரு.வி.க. வாதிடுவதனை விளக்குக?**
**நாடு :** உரை நடை பாடம் இரண்டில் பெருவினா 2 க்குரிய விடை
**சமயம், சாதி:** உரை நடை பாடம் இரண்டில் பெருவினா 3 க்குரிய விடை

## பாடம் :7 மனிதர் வாழ்க

**1. மனித வாழ்வே பெரியது என்னும் அடிப்படையில் மு.வ. உரைக்கும் எதிர்காலக் கனவு யாது?**

1. படைகளுக்கும், படைக்கருவிகளுக்கும் உள்ள மதிப்பும், சிறப்பும், படிப்படியாய்க் குறைந்து வருகின்றன.
2. பத்திரிகை,மேடைப்பேச்சுகள் குறித்த மயக்கம் தெளிய வேண்டும்.
3. பத்திரிகையில் எழுதப்படுவன மேடையில் பேசப்படுவன எல்லாம் உண்மை என்று நம்பக் கூடாது.
4. கற்றவை, கேட்டவை குறித்த உண்மைகளை ஆராய்ந்து பின்னரே ஏற்பர்.
5. போர்ப்படைகளைப்போல தேர்தல்களை அஞ்சாது எதிர்கொள்வர்.
6. போர் வேண்டியதில்லை என்று மறுப்பது போல், ஏமாற்றுத் தேர்தல்களைக் கண்டு மக்கள் மயங்கமாட்டார்கள்.
7. முடி, கோல், பணம், பதவி, கட்சி, தேர்தல் என்று எதைச்சொல்லியும் ஏய்க்க முடியாது. எல்லாம் மனித வாழ்வுக்கு உதவ வந்த கருவிகள். அவை பயனற்றோ, இடையூறாகவோ, தோன்றினால் அவற்றை உரிமையுடன் புறக்கணிப்பர்.

8. கருவிகள் யாவும் சிறியன, மனித வாழ்வே பெரியது என்ற முடிவுக்கு வருவர்.
9. சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும் இல்லாத ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் மலரும்.
10. மனித வாழ்வில் உண்மையாக உள்ளவை இரண்டு. ஒன்று கூட்டுறவு, மற்றொன்று உழைப்பு.
11. கூட்டுறவுக்கு இடையூறு வந்தால், அதை வெல்ல அறப்படை வேண்டும். உழைப்பிற்குப் பஞ்சம் வந்தால் அதை வெல்ல உழுநிலம் வேண்டும்.

**2. தேர்தல் முறைகள் பற்றி டாக்டர் மு.வ. எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?**

உரை நடை பாடம் 7 இல் பெருவினா 3, 4 க்குரிய விடை

# மொழிப்பயிற்சி வினாக்கள்

**வல்லின மெய்களை இட்டு எழுதுதல்**

**குறிப்பு : வரும் சொல்லில் க, ச, த, ப என்ற எழுத்துகளை உடைய சொற்கள் வரும் போது க், ச், த், ப் ஆகிய வல்லின மெய்கள் மிகுந்து வரும்.**

1. நெல்லிகாய், தான்றிகாய், கடுகாய் ஆகிய மூன்று சரக்குகளை கொண்டது திரிபலை எனப்படும்.
நெல்லி**த்**காய், தான்றி**த்**காய், கடு**த்**காய் ஆகிய மூன்று சரக்குகளை**க்** கொண்டது திரிபலை எனப்படும்.

2. கொச்சை சொற்களும், வழூஉ சொற்களும் மிகுதியாக புழங்குவதால் தமிழ் இலக்கிய நடையை புறக்கணிக்க கூடுமோ?
கொச்சை**ச்** சொற்களும், வழூஉ**ச்** சொற்களும் மிகுதியாக**ப்** புழங்குவதால் தமிழ் இலக்கிய நடையை**ப்** புறக்கணிக்க**த்** கூடுமோ?

3. கலைதுறை மொழித்துறை, மருத்துவதுறை, இசைதுறை, சமயதுறை ஆகியவற்றிற்கு ஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய பணி பெரிது அன்றோ?
கலை**த்**துறை, மொழி**த்**துறை, மருத்துவ**த்** துறை, இசை**த்**துறை, சமய**த்**துறை ஆகியவற்றிற்கு ஆபிரகாம் பண்டிதர் ஆற்றிய பணி பெரிது அன்றோ?

4. தமிழிசையில் ஆய பாலை, வட்ட பாலை, திரிகோண பாலை, சதுர பாலை என்ற நான்கு இசை முறைகள் இருந்தன.
தமிழிசையில் ஆய**ப்**பாலை, வட்ட**ப்**பாலை, திரிகோண**ப்**பாலை, சதுர**ப்**பாலை என்ற நான்கு இசை முறைகள் இருந்தன.

5. ஏட்டு சுவடிகளில் சித்த மருத்துவ செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.
ஏட்டு**ச்** சுவடிகளில் சித்த மருத்துவ**ச்** செய்திகள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன.

6. பட்ட பகலிலே பாவலர்க்கு தோன்றுகிற நெட்டை கனவு
பட்ட**ப்** பகலிலே பாவலர்க்கு**த்** தோன்றுகிற நெட்டை**க்** கனவு

7. பதிக கிளவி பல்வகை பொருளை தொகுதியாக சொல்லுதல் ஆம்.
பதிக**த்** கிளவி பல்வகை**ப்** பொருளை**த்** தொகுதியாக**ச்** சொல்லுதல் ஆம்.

8. கள்வார்க்கு தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்கு தள்ளாது புத்தேள் உலகு
கள்வார்க்கு**த்** தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்கு**த்** தள்ளாது புத்தேள் உலகு.

9. தேருளை புரவி வாரண தொகுதி திறைகள் கொண்டு வரும் மன்ன.
தேருளை**ப்**புரவி வாரண**த்** தொகுதி திறைகள் கொண்டு வரும் மன்ன.

10. தொன் மூதாலத்து பொதியில் தோன்றிய நாலூர் கோசர்
தொன் மூதாலத்து**ப்**பொதியில் தோன்றிய நாலூர்**க்** கோசர்.

11. படைப்பு பல படைத்து பலரோடுண்ணும் செல்வம்
படைப்பு**ப்** பல படைத்து**ப்** பலரோடுண்ணும் செல்வம்.

12. அறிவு குறைவு, கவன குறைவு, திறமை குறைவு, ஆகியவற்றால் விபத்துக்கள் உண்டாகின்றன.
அறிவுக்குறைவு, கவனக்குறைவு, திறமைக் குறைவு ஆகியவற்றால் விபத்துக்கள் உண்டாகின்றன.

13. ஊட்ட சத்து குறைவால் கரு கொண்டதாய் குறைபேற்றுக்கு ஆளாகலாம்.
ஊட்டச் சத்துக் குறைவால் கருக்கொண்ட தாய் குறைப்பேற்றுக்கு ஆளாகலாம்.

14. பாடதிட்டத்தில் குமரபருவ சிக்கல்களை தீர்க்கும் உளவியற் கட்டுரைகளை சேர்க்க வேண்டும்.
பாடத்திட்டத்தில் குமரப்பருவச்சிக்கல்களைத் தீர்க்கும் உளவியற் கட்டுரைகளைச் சேர்க்க வேண்டும்.

15. போதை பழக்கத்தால் ஊசிகளை பகிர்ந்து கொள்ளுதலும் எய்ட்ஸ் நோய்க்கு காரணம் ஆகும்.
போதைப்பழக்கத்தால் ஊசிகளைப் பகிர்ந்து கொள்ளுதலும் எய்ட்ஸ் நோய்க்குக் காரணம் ஆகும்.

16. உணவு பொருள் தர குறைவாக விற்கப்படுவதால் நச்சு காளான் உண்டாகி செரிமானம் குறைகிறது.
உணவுப் பொருள் தரக்குறைவாக விற்கப்படுவதால் நச்சுக் காளான் உண்டாகிச் செரிமானம் குறைகிறது.

17. "செல்வ சிறுமீர்காள்! நீராட போதுவீர"! என்றாள். கோதை
"செல்வச் சிறுமீர்காள்! நீராடப்போதுவீர"! என்றாள், கோதை.

18. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்
வெந்தயச் செடிகளின் மேல் மின்னிடும் தங்கப்பூக்கள்.

19. கொத்தி திரியும் அந்த கோழி.
கொத்தித்திரியும் அந்தக்கோழி.

20. கிட்ட போனால் முட்ட பகை
கிட்டப்போனால் முட்டப்பகை

21. சாரைப்பாம்பு குருவி கூட்டில் நுழைந்தது
சாரைப்பாம்பு குருவிக் கூட்டில் நுழைந்தது.

22. ஆசிரியர் நடத்தா பாடத்திலிருந்து எந்த கேள்வியும் வரவில்லை.
ஆசிரியர் நடத்தாப் பாடத்திலிருந்து எந்தக் கேள்வியும் வரவில்லை

23. கேள்விகள் மாணவர் பயிலாபகுதியில் இருந்து வந்ததால் எழுத தெரியவில்லை.
கேள்விகள் மாணவர் பயிலாப் பகுதியில் இருந்து வந்ததால் எழுதத் தெரியவில்லை.

24. எதையும் எழுதி பழக வேண்டும் என்று ஆசிரியர் எனக்கு சொன்னார்.
எதையும் எழுதிப் பழக வேண்டும் என்று ஆசிரியர் எனக்குச் சொன்னார்.

25. அந்த சிறுவன் எந்த பள்ளியில் படித்து சிறந்தான்?
அந்தச் சிறுவன் எந்தப் பள்ளியில் படித்துச் சிறந்தான்.

26. ஓட காண்பது வெள்ளம், ஒடுங்க காண்பது யோகியர் உள்ளம்.
ஓடக் காண்பது வெள்ளம், ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்.

27. வாழைப் பழத்தை தின்றபின் தோலை சாலையில் போடாது குப்பை கூடையில் போடு.
வாழைப்பழத்தைத் தின்ற பின் தோலைச் சாலையில் போடாது குப்பைக் கூடையில் போடு.

28. விரைவாக செல், வண்டி வர போகிறது.
விரைவாகச் செல்,வண்டி வரப்போகிறது.

29. இந்த ஓவியத்தில் அமைந்த வண்ண செறிவும் ஓவிய பொலிவும் நம்மை கவர்கின்றன.
இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச் செறிவும் ஓவியப் பொலிவும் நம்மைக் கவர்கின்றன.

30. இப்படி சொன்னால் எப்படி புரியுமென தெரியவில்லை.
இப்படிச் சொன்னால் எப்படிப் புரியுமெனத் தெரியவில்லை.

## வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுதல்

1. செம்பியன் மாதேவிப் போன்ற சோழ பேரரசியர் செப்பு திருமேனிகள் செய்தளிப்பதை தம் கடமை என கருதினர் போலும்.
செம்பியன் மாதேவி - போன்ற சோழ**ப்** பேரரசியர் செப்பு**த்** திருமேனிகள் செய்தளிப்பதை**த்** தம் கடமை என**த்** கருதினர் போலும்.
2. சீத்தலை சாத்தன் என்றப் புலவர்ப் பெருமான் தனது காப்பியத்திற்கு மணிமேகலைத் துறவு என்றேப் பெயரிட்டார்.
சீத்தலை**ச்** சாத்தன் என்ற - புலவர் - பெருமான் தனது காப்பியத்திற்கு மணிமேகலை- துறவு என்றே - பெயரிட்டார்.

3. "பித்தர் சொன்னவும் பேதையர்ச் சொன்னவும் பத்தர்ச் சொன்னவும் பன்னபெறுபவோ" என்றார்க் கம்பர்.
பித்தர் சொன்னவும் பேதையர் - சொன்னவும் பத்தர்- சொன்னவும் பன்ன**ப்** பெறுபவோ" என்றார்- கம்பர்.
4. வேட்டுவ பெண்கள் விளையாட போவதுண்டு என்றுச் சஞ்சீவி பர்வதச்சாரல் பாடுகிறது.
வேட்டுவ**ப்** பெண்கள் விளையாட**ப்** போவதுண்டு என்று - சஞ்சீவி பர்வதச் சாரல் பாடுகிறது.
5. பாஞ்சாலிக் கண்ணனைப் பார்த்துக் கண்ணாக் காப்பாய் என்று கூறினாள்.
பாஞ்சாலி - கண்ணனைப் பார்த்துக் கண்ணா - காப்பாய் என்று கூறினாள்.
6. வாழ்கத் தமிழ் என்று அவனாச் சொன்னான் அறிந்துச் சொல் எனக்கு.
வாழ்க - தமிழ் என்று அவனா -சொன்னான் அறிந்து - சொல் எனக்கு.
7. நீரோச் சோறோ எதுக்கிடைத்தாலும் உண்டுச்செல்வேன்.
நீரோ - சோறோ எது - கிடைத்தாலும் உண்டு- செல்வேன்.
8. கபில பரணர் வளர்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர்.
கபில**ப்** பரணர் வளர்பிறை ஒளியில் சுடு- சோறும் காய் - கறியும் உண்டனர்.
9. சோறுக் கொதிக்கிறது போத்தம்பி அடுப்பைக் குறை என்றவுடன் சென்றுப் பார்த்தான்.
சோறு - கொதிக்கிறது போ- தம்பி அடுப்பைக் குறை என்றவுடன் சென்று - பார்த்தான்.
10. என்னோடுப் போந்த இளங்கொடி நங்கை
என்னோடு - போந்த இளங்கொடி நங்கை.
11. விடிக்காலை வேளை சுடுச்சோறு ஆக்கிப் பரிமாறக் கூடுமா?
விடி - காலை வேளை சுடு - சோறு ஆக்கிப் பரிமாறக் கூடுமா?
12. வெண்ணிலாக் கலக்கலவென்றுச்சிரித்தாள்
வெண்ணிலா - கல - கல வென்று சிரித்தாள்
13. குபுக்குபுவென்றுப் புகை மண்டிலம் சூழ்ந்தது.
குபு- குபு வென்று - புகை மண்டிலம் சூழ்ந்தது.
14. துறவிக் குடிலுக்குள் வந்தச் சிறவர் இரண்டுப் பேர்.
துறவி - குடிலுக்குள் வந்த - சிறுவர் இரண்டு -பேர்.
15. வைக்கோலைத் தேடி வந்தக் காளை ஓடியது.
வைக்கோலைத்தேடி வந்த - காளை ஓடியது.

## பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுதல்

1. "ஸ்ரீ மான் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் நாம கரணத்தை இந்தக்கப்பலுக்குச் சூட்டுவதில் ஸந்தோஷமடைகிறேன்'. என்றார் மூதறிஞர் இராஜாஜி.
'**திருவாளர்** வ.உ.சிதம்பரம் பிள்ளையின் **பெயரை** இந்தக் கப்பலுக்குச் சூட்டுவதில் **மகிழ்ச்சி** அடைகிறேன்' என்றார் மூதறிஞர் இராசாசி.
2. 'டி.வி.யில் சீரியல் பார்க்காவிட்டால் லைஃபே போர் அடித்துவிடும்' என்கிறாள் பாட்டி.
'**தொலைக்காட்சியில் தொடர்களைப்** பார்க்காவிட்டால் **வாழ்க்கையே வெறுத்து**விடும்' என்கிறாள் பாட்டி.

3. இந்த செஞ்சுரி ‘டென்ஷன்’ நிறைந்தது.
இந்த **நூற்றாண்டு மனஅழுத்தம்** நிறைந்தது.
4. ஸ்லிம்மாக இருப்பதே பியூட்டி என்ற எண்ணம் பரவி வருகிறது.
**உடல் மெலிவாக** இருப்பதே **அழகு** என்ற எண்ணம் பரவி வருகிறது.
5. நமஸ்காரம் என்று சாஸ்டாங்கமாக விழுந்தவனை ஆசிர்வதித்தேன்.
**வணக்கம்** என்று **நெடுஞ்சாண் கிடையாக** விழுந்தவனை **வாழ்த்தினேன்.**
6. பிரயாணி பிரயாணத்தை ரத்து செய்தவுடன் ரூபாய் பட்டு வாடா செய்யப்பட்டது.
**பயணி பயணத்தை விலக்கியவுடன் பணம் திரும்பக் கொடுக்கப்பட்டது.**
7. செல்வனுக்கும் கிள்ளைக்கும் தலா ஐந்து புஸ்தகம் கொடு.
**செல்வன், கிள்ளை** ஆகிய **ஒவ்வொருவருக்கும்** ஐந்து **புத்தகங்கள்** கொடு.
8. குறிஞ்சி தாக்கல் செய்த வழக்கு சுமூகமாகப் பைசல் செய்யப்பட்டது.
குறிஞ்சி **தொடுத்த** வழக்கு **நல்ல முறையில் முடிக்கப் பெற்றது.**
9. சந்நிதியில் சகல ஜனங்களும் உபந்நியாசம் கேட்கத் திரண்டிருந்தனர்.
**கோவிலில் மக்கள் அனைவரும் ஆன்மீக உரை** கேட்கத் திரண்டிருந்தனர்.
10. பந்து மித்திரர் சகிதம் வந்து ஆசீர்வதிக்கக் கோருகிறேன்.
**உறவினர், நண்பர்களுடன் வந்து வாழ்த்திட வேண்டுகிறேன்.**
11. என் ஏக புதல்வனின் ஜானவாசத்திற்குச் சகலரும் வரணும்.
என் **ஒரே மகனின் மாப்பிள்ளை அழைப்பிற்கு அனைவரும் வரவேண்டும்.**
12. ஸ்ரீ ரங்கத்தில் ஸ்வாமி ஸ்ரீ ரங்கநாதர்கோவில் கொண்டுள்ளார்.
**திருவரங்கத்தில் இறைவன் திருவரங்க நாதர்** கோவில் கொண்டுள்ளார்.
13. ஸ்ரீ ரங்கத்தில் ஸ்ரீ ரங்கநாதருக்குக் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.
**திருவரங்கத்தில் திருவரங்க நாதருக்குக் குடமுழுக்கு** நடைபெற உள்ளது.
14. நான் செய்த தவறுக்கு சகல ஜனங்களும் என்னை ஷமித்தருள வேண்டும்.
நான் செய்த தவறுக்கு **மக்கள் அனைவரும்** என்னை **மன்னித்தருள** வேண்டும்.
15. “வீக்கான என் ஆன்ட்டி ரெஸ்ட் எடுக்க வேண்டும்” என்று ஹார்ட் ஸ்பெஷலிஸ்ட் அட்வைஸ் கூறினார்.
**“உடலநலம் குறைந்த என் அத்தை ஓய்வு** எடுக்க வேண்டும்” என்று **இதயவியல் வல்லுநர் அறிவுரை** கூறினார்.
16. டயாபெட்டிக் பேஷண்ட் ஸ்வீட் சாப்பிடுவதை ஸ்டாப் செய்ய வேண்டும்.
**நீரிழிவு நோயாளி இனிப்பு** சாப்பிடுவதை **நிறுத்தம்** செய்ய வேண்டும்.

## கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுதல்

1. அப்பிசி மாசம் அடமள இம்பாங்க
**ஐப்பசி மாதம் அடைமழை என்பார்கள்.**
2. கோளி முட்டை தாவாரத்தில் உருண்டது.
**கோழி** முட்டை **தாழ்வாரத்தில்** உருண்டது.
3. வெடியங்காட்டியும் வெத்திலை போடறது ஒரு பளக்கமா?
**விடிவதற்குள் வெற்றிலை போடுவது ஒரு பழக்கமா?**
4. ஒருத்தன் ஒண்டியாய்ப் போனால் அது ஊர்கோலமா?
**ஒருவன் ஒன்றியாய்ப்** போனால் அது **ஊர்வலம் ஆகுமா**?
5. கொடுத்த சேதியைக் கோர்வையாய்ப் பேசு
கொடுத்த செய்தியைக் **கோவையாய்ப்** பேசு.
6. சோறு தின்று, பழம் உண்டு, பால் சாப்பிட்டுப் படுத்தான்.
சோறு **உண்டு,** பழம் **தின்று**, பால் **பருகிப்** படுத்தான்.
7. ஆத்தங்கரையில் அஞ்சு காணி நஞ்சை நிலம் இருக்கு.
**ஆற்றங்கரையில் ஐந்து** காணி **நன்செய்** நிலம் உள்ளது.
8. வலது பக்கச் சுவற்றில் எழுதாதே
**வலப்பக்கச் சுவரில்** எழுதாதே
9. நஞ்சையும் புஞ்சையும் காஞ்சி போயின.
**நன்செய்யும் புன்செய்யும் காய்ந்து போயின.**
10. அண்ணாக் கயிறு அறுந்தது.
**அரைஞாண்** கயிறு அறுந்தது.

# வாக்கியப்பிழைகளைத் திருத்துதல்

| பிழை | | திருத்தம் |
|---|---|---|
| 1. வண்டிகள் ஓடாது | - | வண்டிகள் **ஓடா** |
| 2. அவை இங்கே உளது | - | அவை இங்கே **உள** |
| 3. அது எல்லாம் | - | **அவை** எல்லாம் |
| 4. மக்கள் கிடையாது | - | மக்கள் **இல்லை** |
| 5. வருவதும்போவதும் கிடையாது | - | வருவதும் போவதும் **கிடையா** |
| 6. ஒன்றோ அல்லது இரண்டோ தருக | - | ஒன்றோ இரண்டோ தருக |
| 7. சென்னை என்ற நகரம் | - | சென்னை **என்னும்** நகரம் |
| 8. எனது மகன் | - | **என்** மகன் |
| 9. ஏற்கத் தக்கது அல்ல | - | ஏற்கத் தக்கது **அன்று** |
| 10. அவளது தந்தை | - | **அவள்** தந்தை |
| 11. புலி வந்தன | - | புலி **வந்தது** |
| 12. எருதுகள் ஓடியது | - | எருதுகள் **ஓடின** |
| 13. பூக்கள் மலர்ந்து மணம் வீசியது | - | பூக்கள் மலர்ந்து மணம் **வீசின** |
| 14. இங்குள்ளது எல்லாம் நல்ல பழங்களே | - | **இங்குள்ளவை** எல்லாம் நல்ல பழங்களே |
| 15. எனக்குப் பல வீடுகள்உள | - | எனக்கு வீடுகள் பல **உள்ளன** |
| 16. இது பொது வழி அல்ல | - | இது பொது வழி **அன்று** |
| 17. விழாவில் பல அறிஞர் பேசினர் | - | விழாவில் அறிஞர்கள் **பலர்** பேசினர் |
| 18. தென்றல் மெல்ல வீசின | - | தென்றல் மெல்ல **வீசியது** |
| 19. வாகனத்தை இடது பக்கம் திருப்பாதே | - | வாகனத்தை **இடப்பக்கம்** திருப்பாதே |
| 20. பத்து பழங்களில் ஒரு பழமே நல்லன | - | பத்துப் பழங்களில் ஒரு பழமே **நல்லது** |
| 21. வலது பக்கச் சுவரில் எழுதாதே | - | வலப்பக்கச் சுவரில் எழுதாதே |

22. ஒவ்வொரு சிற்றூர்களிலும் ஊராட்சி உள்ளது.
    ஒவ்வொரு **சிற்றூரிலும்** ஊராட்சி உள்ளது.
23. மாணவர்கள் கல்வியறிவு ஒழுக்கத்திற் சிறந்து விளங்க வேண்டும்.
    மாணவர்கள் **கல்வியறிவிலும், ஒழுக்கத்திலும்** சிறந்து விளங்க வேண்டும்.
24. அவர் தான் கூறினார் இவர் தான் கூறினார் என்று பாராது எவர் தான் கூறினாலும் மெய்ப்பொருள் காண்க-
    அவர்**தாம்** கூறினார் இவர்**தாம்** கூறினார் என்று பாராது எவர்**தாம்** கூறினாலும் மெய்ப்பொருள் காண்க.
25. நல்லவைகளும் கெட்டவைகளும் பத்திரிக்கைகளில் வெளியிடப்படுகின்றன.
    **நல்லனவும், கெட்டனவும்** பத்திரிக்கைகளில் வெளியிடப்படுகின்றன.
26. கண்ணன் முருகன் மற்றும்வேலன் வந்தனர்.
    **கண்ணன், முருகன், வேலன் ஆகியோர்** வந்தனர்.
27. சென்னைக்கு அருகாமையில் இருப்பது கன்னியாகுமரி அல்ல.
    சென்னைக்கு **அருகில்** இருப்பது கன்னியாகுமரி அன்று.
28. தலைவி தலைவனோடு சென்றார்.
    தலைவி தலைவனோடு **சென்றாள்.**
29. இதனைச் செய்தவர் இவரல்லவா?
    இதனைச் செய்தவர் **இவரல்லரோ**?
30. பெரியதும் சிறியதுமான சாமான்களைச் செய்கிறார்கள்.
    **பெரியனவும், சிறியனவுமான** சாமான்களைச் செய்கிறார்கள்.

# மரபு வழூஉச்சொற்களை நீக்கி எழுதுதல்

1. காகம் கூவும், நாய் கத்தும்
   காகம் **கரையும்**, நாய் **குரைக்கும்**
2. காட்ல யானை கத்தியது, புலி கூவியது
   காட்டில் யானை **பிளிறியது**, புலி **உறுமியது**

3. நீரின்றி நஞ்சையும், புஞ்சையும் விளையவில்லை
நீரின்றி **நன்செய்யும், புன்செய்யும்** விளையவில்லை

4. யானை மேய்ப்பனோடு ஆட்டுப் பாகனும் வந்தான்
யானைப் **பாகனோடு** ஆட்டு **இடையனும்** வந்தான்

5. கரும்புத் தோப்புக்கு அருகாமையில் நாய் கத்தியது
கரும்புக் **கொல்லைக்கு** அருகில் நாய் **குரைத்தது.**

6. மயில் கூவ, குயில் அகவ, கிளி பாடியது
மயில் **அகவ**, குயில **கூவ**, கிளி **பேசியது**

7. தேயிலைத்தோப்புக்கு அருகில் பலாத் தோட்டம் உள்ளது.
தேயிலைத் **தோட்டத்திற்கு** அருகில் **பலாத் தோப்பு** உள்ளது.

8. சோளக்காடு - ஆலங்கொல்லை
சோளக் **கொல்லை** - ஆலங்**காடு**

9. குதிரைத் தொழுவம் - யானை கொட்டில்
குதிரைக்**கொட்டில்** - யானைக் **கூடம்**

10. தோட்டத்தில் வாழைச்செடியும் மாஞ்செடியும் நட்டனர்.
தோட்டத்தில் **வாழைக் கன்றும்**, **மாங்கன்றும்** நட்டனர்.

## தமிழாக்கம் தருக

1. A Friend in need is friend in deed
ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்

2. A Little Knowledge is dangerous
அரைகுறை அறிவு ஆபத்தானது.

3. A penny saved is a penny gained
சிறுதுளி பெருவெள்ளம்

4. A young calf knows not fear
இளங்கன்று பயமறியாது

5. A man of courage never want weapons
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

6. Do not add fuel to the flame
எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே

7. All covet all loss (or) Covet all lose all
பேராசை பெருநட்டம்

8. All that glitters is not gold
மின்னுவதெல்லாம் பொன்னல்ல

9. Art is long and the life is short
கல்வி கரையில கற்பவர் நாள் சில

10. As is the king so are his subjects
அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழி

11. A young thing is easier twisted that an old tree.
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

12. A calm before a storm
புலி பதுங்குவது பாய்வதற்காகத் தான் (அ) புயலுக்கு முன் அமைதி.

13. A crying child will get milk
அழுகிற பிள்ளை பால் குடிக்கும்

14. Barking dogs seldom bite
குரைக்கிற நாய் கடிக்காது

15. Birds of the same feather flock together
இனம் இனத்தோடு சேரும்

16. Blood is thikcker than water.
தானாடா விட்டாலும் தன் தசை ஆடும்
17. Child is the father of the man
விளையும் பயிர் முளையிலே தெரியும்
18. Cast no pearls before swine
கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?
19. Delay is dangerous
கால தாமதம் ஆபத்தானது
20. Dimond cuts dimond
முள்ளை முள்ளால் எடு
21. Distance lends enchantment to the view
இக்கரைக்கு அக்கரை பச்சை
22. Diligence is the mother of good luck
முயற்சி திருவினையாக்கும்
23. Eagles don't catch flies
புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது
24. East or west home is best
எலி வளையானாலும் தனிவளை வேண்டும்
25. Empty vessels make much noise
குறை குடம் கூத்தாடும்
26. Every tide has its ebb.
சாண் ஏறினால் முழம் சறுக்கும்.
27. Every homer some times nods
ஆனைக்கும் அடி சறுக்கும்.
28. Face is the index of the mind
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
29. Familiarity breeds contempt
பழகப்பழகப்பாலும் புளிக்கும்.
30. Failure is the stepping stone to success
தோல்வியே வெற்றிக்கு முதல்படி.
31. First deserve than desire
முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?
32. God is love
அன்பே கடவுள்.
33. Honesty is the best Policy
நேர்மையே சிறந்த கொள்கை.
34. Haste makes waste
பதறிய காரியம் சிதறும்
35. Knowledge is Power
அறிவே ஆற்றல்
36. Idleness is the root of all evils
சோம்பலே எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படை.
37. Look before you leap
ஆழம் அறியாமல் காலை விடாதே
38. Money makes many things
பணம் பத்தும்செய்யும்
39. Make hay while the sun shines
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்